பொறியியல் தொழினுட்பவியல்
பல்தேர்வு வினாவிடைகள்

தமிழ்மொழி மூலத்தில் இடம்பெற்ற அங்கீகரிக்கப்பட்ட பரீட்சை வினாத்தாள்களிலிருந்து அலகு ரீதியாக தொகுக்கப்பட்ட பல்தேர்வு வினாக்கள்

The National e-learning Portal for The General Education

தொகுப்பு :

1. திரு. எஸ். பஸ்லின், ஆசிரியர், வ/செட்டிகுளம் மகா வித்தியாலயம்
2. திரு. ச. மயூரதன், ஆசிரியது, மன்/முசலி மகா வித்தியாலயம்

பதிப்பும், வெளியீடும், விநியோகமும்
மாகாணக் கல்வித் திணைக்களம்,
வடக்கு மாகாணம்.

உசாத்துணைகள்

இலக்கம்	வினாத்தாள்
01	FWC (March - 2014)
02	FWC (July - 2014)
03	FWC (March - 2015)
04	FWC (March - 2016)
05	FWC (June - 2015 - 13)
06	FWC (November - 2016 - 13)
07	FWC (July - 2016 - 12)
08	FWC (November - 2016 - 13)
09	FWC (June - 2016 - 13)
10	FWC (March - 2016 - 13)
11	FWC (July - 2015 - 12)
12	Pass Paper (G.C. E A / L - 2016)
13	Pass Paper (G.C.E. A / L - 2015)
14	Model Paper (Moratuwa University)

The National e-learning Portal for General Education

குடிசார் எந்திரவியல்

கூரை

01. பின்வரும் உருவில் ஒரு மரக் கூரைக் கட்டமைப்பு காணப்படுகின்றது.



இங்கு A, B, C, D எனக் குறிக்கப்பட்டுள்ள கூறுகள் முறையே (12)

1) முகட்டு வளை, அரசிமல், இழுவை வளை, கைமரம்
2) அரசிமல், முகட்டு வளை, இழுவை வளை, கைமரம்
3) கைமரம், அரசிமல், முகட்டு வளை, இழுவை வளை
4) இழுவை வளை, அரசிமல், முகட்டு வளை, கைமரம்
5) இழுவை வளை, முகட்டு வளை, அரசிமல், கைமரம்

02. வரிப்படத்தில் 'X' ஆனது (13)



1) மூலைக்கைமரம் (Hip rafter)
2) இடைவளை (Purlin)
3) சாதாரண கைமரம் (Common rafter)
4) பொது கைமரம் (Jack rafter)
5) நீரோடிக் கைமரம் (Valley rafter)

03. ஒரு கட்டிடத்தின் கூரையிலிருந்து அடி அத்திவாரம் வரையான கட்டிடத்தினால் ஏற்படுத்தப்படும் சுமை? (14)

1) மாய்சுமை
2) உயிர்ப்புச்சுமை
3) காற்றுச்சுமை
4) வேறு சுமைகள்
5) மேற்சொன்ன எவையுமில்லை.

04. 4″× 3″ மரம் பயன்படுத்தப்படும் கூரையின் பகுதி யாது? (02)

1) முகட்டுவளை
2) குறுக்குச்சட்டம்
3) நிலைக்குத்து முட்டு
4) கைமரம்
5) சுவர் வளை

05. சவடிக்கூரை (பட்டிகை collar) தயார் செய்யும் பொழுது சவடி வளை இடப்படுவது முகட்டுவளை மட்டத்தில் இருந்து சுவர் வளைமட்டத்திற்கான நிலைக்குத்து உயரத்தில், முகட்டு வளையிலிருந்து (05)

1) $\frac{1}{2}$ பங்கு
2) $\frac{2}{3}$ பங்கு
3) $\frac{1}{3}$ பங்கு
4) $\frac{1}{4}$ பங்கு
5) $\frac{3}{4}$ பங்கு

06. பட்டிகைக் கூரை அமைப்பு முறையில் பட்டி அமைக்கப் பொருத்தமான இடம் (Collar roof) (07)



1) 2) 3) 4) 5)

07. சாதாரணமாக பயன்படுத்தப்படும் சுவர்வளை, கைமரம், சலாகை என்பவற்றின் அளவுகள் முறையே mm இல் (11)

1) 100 x 75, 100 x 50, 50 x 25
2) 100 x 50, 100 x 75, 100 x 100
3) 50 x 75, 75 x 100, 150 x 75
4) 75 x 100, 50 x 100, 25 x 50
5) 125 x 75, 100 x 75, 50 x 25

08. சாதாரண கூரைச்சட்டம் ஒன்றில் பிரதான கைமரம் (Principal Rafter) சுமை காரணமாக ஏற்படும் உள்வளைவைத் தடுப்பதற்குப் பயன்படும் உறுப்பின் பெயர் (11)

1) இழுவை வளை (Tie beam)
2) சுவர் வளை (Wall plate)
3) முட்டு (Strut)
4) இடைவளை (Purlins)
5) இராச ஊசிக்கால் (King Post)

09. சாதாரண ஓட்டுக்கூரை அமைப்பொன்றில் உள் வளைவு ஏற்பட்டு இருப்பது அவதானிக்கப்பட்டது. இதன் போது இடைவளையானது அமையப் பெற்றிருக்கக் கூடிய சந்தர்ப்பங்கள். (11)

1)  2)  3)  4)  5) 

10. கூரை அமைப்பு வேலைகளில் சுவர்வளை, "இழுவைவளை" போன்றவற்றை நீட்டுவதற்கு மிகவும் சாதகமான தச்சுமூட்டு எனக் கருதக்கூடியது (11)

1) கடிவாள மூட்டு Plai in Bridle Joint
2) குறுக்கு நாக்கு மூட்டு Cross Tongu Joint
3) தனிப் புறாவால் மூட்டு Single dove tailed Joint
4) நெற்றி மூட்டு Scarf Joint
5) உரைகான் மூட்டு Single bult Joint.

11. நீரோடிகளில் கீழ் இறங்கு தலை என்பது (Running head) (10)

1) நீரோடிகள் திரும்பும் போது பயன்படுவது.
2) நீரோடிகளை இணைப்பது.
3) கூரை திருத்தும் போது பயன்படுத்தப்படுவது.
4) நீரோடிகளையும் இறங்கு குழாய்களையும் தொடுப்பது.
5) கூரையின் முடிவிடத்தில் பயன்படுவது.

12. கலிக்கட் / நாட்டோடு பயன்படுத்தப்படும் கூரை அமைப்பு முறைகளில் சலாகைகளிற்கு இடையேயான இடைவெளி mm இல் (மையத்திற்கு மையம்) - center distance (08)

1) 200 - 225mm
2) 225 - 250mm
3) 250 - 275mm
4) 275 - 300mm
5) மேற்கூறிய எவையுமில்லை.

13. மரக்குடைத் தடுப்பு ஆணியில் வாசர் பயன்படுத்தப்படுவது (08)

1) ஆரம்பத்தில் மட்டும்
2) ஆரம்பத்திலும் இறுதியிலும்
3) இறுதியில் மட்டும்
4) பயன்படுத்தத் தேவையில்லை.
5) யாவும் சரி

14. மழைநீர்ப் பீலிகள் உற்பத்தி முறையில் சாதாரணமாகப் பயன்படுத்தப்படும் மூலப்பொருள் (08)

1) UPVC
2) வார்ப்பிரும்பு
3) கன்னார்த்தகடுகள்
4) கல்வனைசுப்படுத்திய இரும்பு
4) அலுமினியம்

15. தரை ஓட்டைப் (Floor Tiles) பதிப்பதற்கு பயன்படுத்த முடியாத உபகரணம் (08)

1) நீர்மட்டம்
2) மட்டப்பலகை
3) றப்பர்ச் சுத்தியல்
4) மூலைமட்டம்
5) தூக்குக்குண்டு

16. பின்வருவனவற்றுள் முடிப்பு முறைக்குப் (Finishing) பொருத்தமல்லாத ஒன்று (08)

1) வெளி, உள் சுவர்க்காரை மீது தீந்தை பூசுதல்.
2) வீட்டுத் தளத்திற்கு தரை ஓடு பதித்தல்.
3) சிறந்த செங்கற்களைக் கொண்டு மறைப்புச் சுவர் அமைத்தல்.
4) மர உறுப்புக்களுக்குத் தீந்தை பூசுதல்.
5) மேற்கூறிய யாவும் பிழை.

17. மழைநீர் அகற்றலில் பயன்படுத்தப்படும் "ஓடும் தலை" என்னும் அமைப்பு பயன்படுத்தப்படுவது (08)

1) பீலியை வைத்திருக்க
2) பீலியைப் பொருத்த
3) பீலியின் முனையை மூட
4) இறக்கும் குழாய்க்கு நீரை வழிப்படுத்த
5) நீருடன் சேர்ந்து அசைவதற்கு

18.



(07)

மேலே காட்டப்பட்டுள்ள கூரை அமைப்பு முறையில் முகட்டு வளை x இன் நீளம் யாதாக இருக்கும்? (07)

1) 7m
2) 4m
3) 6m
4) 8m
5) 7.5m

19. வீட்டின் சுவர் மீது சுவர்வளை பொருத்துவதற்கு ஏற்ற முறை (07)

1) 
2) 
3) 

4) 
5) 

20. வறண்ட வலயப் பிரதேசத்திற்குப் பொருத்தமான அலை நெளிக் கன்னார்த் தகட்டுக் கூரைக்கு பொருத்தமான கூரையின் சாய்வு (08)

1) 45^0
2) 40^0
3) 30^0
4) 15^0
5) $7\frac{1}{2}^0$

21.



நான்கு பக்கமும் சரிந்த மூலைக் கூரையொன்றின் கிடைப்படம், அருகே காட்டப்பட்டுள்ளது. இக் கட்டடத்தின் வெளி, நீள, அகலம் (தாழ்வாரங்கள் சேர்த்து) படத்தில் தரப்பட்டுள்ளது. முகட்டு வளை x இன் நீளம் யாதாக இருக்கும்? (05)

1) 1m
2) 1.5m
3) 2m
4) 2.5m
5) 3m

22. கூரை அமைக்கும் போது சுவர்களில் வெடிப்பு அல்லது சாய்வுகள் ஏற்படுவதை தடுப்பதற்காக அமைக்கப்படுவது (06)

1) கைமரம்
2) காக்கும் பலகை
3) அரசிமல்
4) இழுவைவளை
5) முகட்டுவளை

23. கூரையின் சேத்திரம் (Pitch) 30^0 ஆகும். அது 12m நீளமுள்ள சுவர்வளையையும் 6m நீளமுள்ள ஒரு முகட்டு வளையையும் கொண்டுள்ளது. சுவர்வளைக்கும் முகட்டுவளைக்கும் இடையே நடுவில் ஓர் இடைவளை (எலியோடி) அமைய வேண்டியுள்ளது. அதன் நீளம் (06)

1) 6m
2) 7m
3) 8m
4) 9m
5) 10m

24. சுவர்வளை அமைக்க பயன்படும் மரத்தின் அளவு (03)

1) 100 x 50mm
2) 100 x 75mm
3) 100 x 25mm
4) 100 x 100mm
5) மேற்சொன்ன எவையுமில்லை.

25. கூரை அமைப்பில் "பறவை அலகு" மூட்டு பயன்படுவது (birds mouth) (05)

1) சுவர்வளையை நீட்டுவதற்கு
2) கதவுநிலையில்
3) சுவர்வளையுடன் கைமரம் இணைக்க.
4) இடைவளை, கைமரத்துடன் இணைக்க.
5) முகட்டுவளையை நீட்டுவதற்கு

26. சுவர் வளையை (Wallplate) நீட்டுவதற்குப் பொருத்தமான தச்சுமூட்டு படத்தில் காட்டப்பட்டுள்ளது. இதற்குப் பொருத்தமான பெயர் (01)



1) பொழியும் கழுந்தும் Mortice & Tenon Joint
2) நெற்றி மூட்டு Scarf Joint
3) இணைமூட்டு Butt Joint
4) நாவாதாவாளிப்பு Tonque & groove Joint
5) சதுர மூட்டு Square Joint

27. கூரைச் சட்டங்களின் மீது (Roof Truss) பயன்படுத்தப்படும் மரத்தாலான இடைவளையின் (Purlin) சரியான அமைப்பு (01)

1) 
2) 
3) 
4) 
5) 

28. கூரை வேலைப்பாடு ஒன்றில் செங்குத்தாகவோ அல்லது சாய்வாகவோ சந்திக்கும் இரு மரத் துண்டங்களின் இணைப்பில் "ப" வடிவ இரும்புத் துண்டம் ஒன்று பயன்படுத்தப்படுகின்றது. இதற்குரிய மிகச் சிறந்த காரணமாக அமைவது? (02)

1) கூடுதல் பலத்திற்கு
2) இரும்பு நீண்டகாலம் பாவிக்கும்.
3) மரங்களில் ஏற்படும் வளைவு / விரிகை போன்றவற்றால் ஏற்படும் பாதிப்பைக் குறைக்க.
4) 1 மட்டும் சரி
5) 1 உம் 2 உம் 3 உம் சரி.

அத்திவாரம்

29. "ஈரம் புகாவரிமட்டம்" ஏற்படுத்தப்படுவது (11)
    1) அடி அத்திவாரக் கொங்கிறீட்டுக்கும் அத்திவாரக் கட்டிற்கும் இடையே.
    2) அத்திவாரக்கட்டு மட்டத்திற்கும் செங்கல் கட்டுச் சுவரிற்கும் இடையில்.
    3) யன்னல் மட்டத்தில்
    4) லின்டல் மட்டத்தில்
    5) சுவர்வளை மட்டத்தில்

30. தரை ஓடுகளை (Floor Tiles) நில முடிப்புப் பொருளாக பயன்படுத்துவதன் நோக்கம் அல்லாதது (11)
    1) எளிதாக தூய்மைப்படுத்தி பராமரிக்கக் கூடியது.
    2) உயர்தர தோற்றத்தை தரக் கூடியது.
    3) நீரினால் பழுதடையாதது.
    4) மிகவும் சிக்கனமான முறையாக கொள்ளக் கூடியது.
    5) நீர்க்கசிவை தடுக்கக் கூடியது.

31. ஒரு கொங்கிறீற்று அத்திவாரம் 1 : 3 : 6(32) எனக் குறித்துரைக்கப்படும் போது 1 : 3 : 6(32) என்பதன் கருத்தை சரியான வரிசையில் காட்டும் தொகுதி (09)
    1) சீமெந்து : கரட்டுதிரள் : நுண்திரள் (நுண்திரளின் அளவு mm இல்)
    2) சீமெந்து : கரட்டுதிரள் : நுண்திரள் (நுண்திரளின் அளவு Cm இல்)
    3) சீமெந்து : நுண்திரள் : கரட்டுதிரள் (கரட்டுதிரளின் அளவு Cm இல்)
    4) சீமெந்து : நுண்திரள் : கரட்டுதிரள் (கரட்டுதிரளின் அளவு mm இல்)
    5) சீமெந்து : நுண் திரள் : கரட்டுதிரள் (கொங்கிறீற்றின் பலம் Nmm^2 இல்)

32. பின்வருவனவற்றுள் பிரதான அத்திவார வகை அல்லாதது (08)
    1) கீல அத்திவாரம்
    2) திண்டு அத்திவாரம்
    3) தெப்ப அத்திவாரம்
    4) வலுவூட்டிய அத்திவாரம்
    5) முளைக்குற்றி அத்திவாரம்

33. தள முடிப்புப் பொருளொன்றைத் தெரிவு செய்யும் போது (Floor Finishing Materials) கவனம் செலுத்த வேண்டிய விடயம் அல்லாதது (07)
    1) கிரயம்
    2) பாதுகாப்பு
    3) ஏற்றுக் கொள்ளக் கூடிய தோற்றம்
    4) குறுகிய காலப் பயன்பாடு
    5) பயன்படுத்தப்படப் போகும் நிலத்தின் தன்மை.

34. கட்டிட நிர்மான நடவடிக்கைகளின் "ஈரம்புகா வரிமட்டம்" - DPC அமைப்பதன் நோக்கம் (01)
    1) நிலத்தில் இருந்து நீர் சுவரிற்கு செல்வதை தடுத்தல்.
    2) கூரையில் இருந்து நீர் சுவரிற்கு செல்வதை தடுத்தல்.
    3) அத்திவாரத்தில் செங்கற்களுடன் பிணைப்பை ஏற்படுத்தல்.
    4) கறையான்களின் தாக்கத்தை மட்டுப்படுத்த.
    5) அத்திவாரத்தின் அழகை அதிகரிக்க.

35. அத்திவாரத்தின் அடியில் இடப்படும் 75mm தடிப்பான கொங்கிறீட்டிற்கான பொருத்தமான கலவை விகிதம (03)
    1) 1 : 2 : 4
    2) $1 : 1\frac{1}{2} : 3$
    3) 1 : 1 : 2
    4) 1 : 3 : 6
    5) 1 : 2 : 3

36. "கட்டடம் ஒன்றை எவ்வகை நிலப்பரப்பிலும் அமைக்க முடியும்". இக் கூற்று பற்றிய உமது கருத்து? (02)
    1) சரியானது
    2) மிகவும் சரியானது.
    3) பிழையானது
    4) அநாவசியமான கூற்று
    5) தேவையான தரவு குறிப்பிடப்படவில்லை.

37. கொங்கிறீட்டின் கீல அத்திவாரம் அமைக்கும் போது பின்வருவனவற்றுள் சரியானதும் பலமானதுமான முறை எது? (01)

1)


2)


3)


4)


5)


38. கீழே தரப்பட்டுள்ள கூற்றுக்கள் ஓர் எளிய அத்திவாரம் பற்றியவை.

A - அத்திவாரத்தினால் ஒரு கட்டடத்தின் உறுதிப்பாட்டைக் கூட்டலாம்.

B - அடிப்பீடச் சுவரினால் கட்டடத்தின் முழு நிறையையும் ஊடுகடத்தலாம்.

C - கொங்கிறீற்றிலிருந்து அகழ்ந்த அத்திவார அகழியில் உள்ள மண்ணை வேறுபடுத்துவதற்கு மூடு கொங்கிறீற்று பயன்படுத்தப்படுகின்றது.

மேற்குறித்தவற்றில் சரியான கூற்று / கூற்றுகள் (12)

1) A மாத்திரம்
2) A, B ஆகியன மாத்திரம்
3) A, C ஆகியன மாத்திரம்
4) B, C ஆகியன மாத்திரம்
5) A, B, C ஆகிய எல்லாம்.

The National e-learning Portal for The General Education

கொங்கிறீட்

39. வலியுறுத்திய கொங்கிறீட் தகடு ஒன்றில் அனுமதிக்கத்தக்க மூடுகையின் அளவு
   1) 5mm 2) 10mm 3) 15mm
   4) 20mm 5) 25mm

40. முன் தயாரிக்கப்பட்ட கொங்கிறீற்று மற்றும் வளைகள் என்பவற்றுக்குப் பயன்படுத்தப்படுகின்ற கொங்கிறீற்றின் கலவை விகிதம் (06)
   1) 1 : 1 : 5 2) 1 : 1 : 2 3) 1 : 3 : 6
   4) 1 : 2 : 4 5) 1 : 2 : 5

41. கொங்கிறீற்றைப் பதப்படுத்துவது (06)
   1) ஈரலிப்பை பேணுவதற்கு 2) வலிமையைக் கூட்டுவதற்கு
   3) ஒப்பமான மேற்பரப்பைப் பெறுவதற்கு 4) சுருங்கலைக் குறைப்பதற்கு.
   5) வளியை அகற்றுவதற்கு

42. கொங்கிறீற்றை தேவையான எவ்வடிவத்திற்கும் அமைக்கலாம். இவ் இயல்பு (06)
   1) நெருக்கல் 2) உருகுதன்மை 3) நெகுழுமை
   4) நீடிறன் 5) மீள்தன்மை

43. ஏந்திகள் (Stirupps) அமைப்பதற்கு மிகவும் உகந்த வடிவம் என ஏற்றுக்கொள்ளப்படுவது (05)



   1) 2) 3) 4) 5)

44. கொங்கிறீட் தகடு ஒன்றிற்கான மீள்வலுவூட்டல் மேற்கொள்ளும் போது பிரதான வலுவூட்டிகள் (Main Bar) இடப்படுவது (08)
   1) நீள அகல்வின் திசையில் 2) குறுகிய அகல்வின் திசையில்
   3) மூலைவிட்ட வழியில் 4) தகட்டின் மேற்பகுதியில்
   5) மேற்கூறிய எவையும் அன்று.

45. சாதாரண வலுவூட்டிய கொங்கிறீட்டின் கலவை விகிதம் பின்வருவனவற்றுள் எது? (07)
   1) $1 : 1\frac{1}{2} : 3$ 2) 1 : 2 : 4 3) 1 : 1 : 2
   4) 1 : 3 : 6 5) $1 : 2\frac{1}{2} : 5$

46. கொங்கிறீற்றில் **சோர்வுச் சோதனை** (Slump test) மேற்கொள்ளப்படுவதன் நோக்கம் (05)
   1) கட்டு வேலைக்கு எடுக்கும் நேரத்தைக் குறிப்பது.
   2) ஸ்தாபிக்கும் அவசியம் சம்பந்தமாக அதற்கு ஏதுவான சுலபமான வேலை செய்வது என்பதை அறிவது.
   3) கலவைக்கு பயன்படும் சீமெந்தின் தரம் பற்றி அறிதல்.
   4) கலவையில் சரியான அளவில் கரட்டுத்திரள்கள் உள்ளதா என அறிதல்.
   5) கலவையில் சரியான அளவில் நுணித்திரள்கள் உள்ளதா என அறிதல்.

47. பின்வரும் வரிப்படங்களில் எவ்விதமாக மீளவலுவூட்டிகளை இடும் போது இழுவை வலுவை தாக்கக் கூடியதாக இருக்கும்? (10)



   1) 2) 3) 4) 5)

48. கொங்கிறீட்டின் கையாளக்கூடிய தன்மையை ஏற்படுத்துவது (11)

1) சீமெந்தின் அளவு
2) நுண்திரள்களின் அளவு
3) கரட்டுத்திரள்களின் அளவு
4) நீர்ச் சீமெந்து விகிதம்
5) அதிர்வூட்டலின் அளவு

49. கொங்கிறீற் சதுரமுகி சோதனைக்கு பயன்படுத்தும் சதுரமுகிகளின் நியம அலகு மில்லி மீற்றரில் (10)

1) 75 x 75 x 75
2) 100 x 100 x 100
3) 125 x 125 x 125
4) 150 x 150 x 150
5) 200 x 200 x 200

50. கொங்கிறீற்று இடும் போது மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளில் சரியானது (09)

1) கலவை செய்து 30 நிமிடத்திற்குள் கொங்கிறீற்று இட்டு பூரணப்படுத்தல் வேண்டும்.
2) மிக உயரத்தில் இருந்து கொங்கிறீற்றை இடக்கூடாது.
3) கொங்கிறீற்றை நிலைப்படுத்தும் போது கூடிய தூரம் பரந்து செல்வதை தவிர்த்தல் .
4) ஒரே தடிப்புக்கு கொங்கிறீற்று இடல்.
5) மேற்கூறிய யாவும் சரி.

51. கொங்கிறீட் வேலைகளில் ஏற்படுத்தப்படும் காப்பு இடைவெளியின் (Cover) ஆகக் குறைந்த அளவு? (07)

1) 100mm
2) 15mm
3) 20mm
4) 25mm
5) மேற்கூறிய எவையுமில்லை.

52. கொங்கிறீட்டில் வலியுறுத்திகள் பயன்படுத்துவதன் நோக்கம் (07)

1) கொங்கிறீட்டின் வளையுமியல்பை அதிகரிக்க.
2) அமுக்க வலுவை அதிகரிக்க.
3) கொங்கிறீட் கலவையை மீதப்படுத்த.
4) கொங்கிறீட்டின் இழுவை வலுவை அதிகரிக்க.
5) மேற்கூறிய எல்லாம்.

53. கொங்கிறீட் உற்பத்தியில் பயன்படுத்தப்படும் இடைநிரப்புப் பொருள்கள் பின்வருவனவற்றுள் எது? (08)

1) சல்லிக்கற்கள்
2) ஆற்றுமண்
3) சிறந்த சீமெந்து
4) நீர்த்தடைச் சீமெந்து
5) நிற மூட்டிகள்

54. கொங்கிறீட் இடும்போது கனக்குற்றிகள் (Cube) அனது உற்பத்தி செய்யப்படுவதன் நோக்கம் (07)

1) கற்களாக பயன்படுத்த.
2) இலகுவாக எடுத்துச் செல்வதற்காக.
3) அமுக்க வலுச் சோதனைகளை மேற்கொள்வதற்காக.
4) இழுவை வலுச் சோதனையை மேற்கொள்வதற்காக.
5) நீர் உறிஞ்சல் அளவினை கணிப்பீடு செய்வதற்காக.

55. வீடுகளில் அமைக்கப்படும் சூரிய நிழற்றி அமைப்பானது (Sunshade) வலுவூட்டப்படும் சரியான முறை எது? (08)

1) 
2) 
3) 
4) 
5) 

56. உள் அளவீடுகள் 3600mm x 2400mm கொண்ட பாதுகாப்பு குடில் ஒன்றின் கொங்கிறீற் உரைப் பாலத்திற்கான விசையூட்டல் விபரங்களை கீழே தரப்பட்டுள்ள படங்கள் காட்டுகின்றன. அவற்றில் எது சரியான விசையூட்டல் ஒழுங்கமைப்பைக் காட்டுகின்றன? (10)



57. கொங்கிறீற்றைப் பதப்படுத்துவது (12)

1) வலிமையைக் கூட்டுவதற்கு.
2) வளிப் பகவுகளை (Air pockets) அகற்றுவதற்கு.
3) ஓர் ஒப்பமான மேற்பரப்பை பெறுவதற்கு
4) ஈரலிப்பைப் பேணுவதற்கு.
5) சுருங்கலைக் குறைப்பதற்கு.

58. தரப்பட்டுள்ள உருவில் காட்டப்பட்டுள்ள கொங்கிறீட் வளை தொடர்பான பின்வரும் கூற்றுகளில் சரியானது? (14)



1) வலையம் B இல் இழுவை விசையும் A இல் அமுக்க விசையும் தொழிற்படுகின்றது.
2) வலையம் A இல் இழுவை விசையும் B இல் அமுக்க விசையும் தொழிற்படுகின்றது.
3) இவ் வளையின் குறுக்குவெட்டு  எனின் வளைவைத் தடுக்கமுடியும்.
4) இவ் வளையின் குறுக்குவெட்டு  எனின் வளைவு அதிகரிக்கும்.
5) வலையம் Bயில் வலுவூட்டல் செய்வதன் மூலம் வளைவைத் தடுக்கலாம்.

59. கொங்கிறீட் உற்பத்தி செய்யும் போது பயன்படுத்தப்படும் நுண்திரள்கள் (Fine Aggregate) தொடர்பாக மிகச் சரியான கூற்று (14)

1) அவை பல்வேறுபட்ட துணிக்கைப் பருமனைக் கொண்டதாக இருத்தல்.
2) ஒரே அளவு துணிக்கை பருமன் உடையாக இருத்தல்.
3) மிகவும் நுண் துணிக்கைகளை மட்டுமுடையதாய் இருத்தல்.
4) களித்தன்மையாயிருத்தல்.
5) தூசுத் துகள்களைக் கொண்டிருத்தல்.

60. பின்வரும் உருக்களில் எது இழுவைச் சுமைகளுக்கான மீளவலுவூட்டலின் சரியான ஒழுங்கமைப்பை காட்டுகிறது? (13)



1) 2) 3) 4) 5)

61. ஒரு மீளவலுவூட்டிய கொங்கிறீற்றுத் தூணின் நெடும்பாட்டு வெட்டு உருவில் காட்டப்பட்டுள்ளது. A, B ஆகியன முறையே (13)



1) கவிவு, சுயாதீன மூடுகை
2) சுயாதீன மூடுகை, கவிவு
3) ஏந்திகள், பிரதான மின்வலுவூட்டல்
4) பிரதான மின்வலுவூட்டல், ஏந்திகள்
5) ஏந்திகள், கவிவு

62. கொங்கிறீட் கலவையில் உள்ள நீரின் அளவை சோதிப்பதற்கான பொருத்தமான களப்பரிசோதனை முறை எது? (14)

1) கூம்புச் சோதனை
2) கனக்குற்றிச் சோதனை
3) அமுக்கச் சோதனை
4) இழுவைச் சோதனை
5) அடர்த்தியாக்கல் சோதனை

63. விட்டக்கல் (Lintel) (லின்டல்) மீது தொழிற்படும் உதைப்பானது பின்வருவனவற்றுள் சுமை மூலம் பிரயோகிக்கப்படுவதனை காட்டும் சரியான வரைபு என நீர் கருதுவது (05)



1) 2) 3) 4) 5)

64. கொங்கிறீற்றினால் அமைக்கப்பட்ட வெயில் நிழற்றியில் (Sun shade) மீள் வலுவூட்டிகள் பிரயோகிக்க வேண்டியது (05)

1) மேற்பரப்புக்கு கிட்ட
2) நடுவில்
3) கீழ்பரப்புக்கு கிட்ட
4) கீழே குறுக்காக
5) எந்த இடத்திலும்

65. கொங்கிறீற் உற்பத்தியின் போது பயன்படுத்தப்படும் **"நீர் - சீமெந்து"** விகிதம் குறித்த அளவிலும் குறைவாக இருக்கும் போது ஏற்படும் குறைபாடு (05)

1) இறுக்கும் போது வெளிகள் உள்ள கொங்கிறீற்றை தயாரிக்கக் கூடியதாக இருத்தல்.
2) நீர் குறைவாக இருக்கின்றமையால் நீரேற்ற இரசாயனத் தாக்கம் தக்கவாறு நடைபெறாமையால் வலிமை குறைவடைதல்.
3) வலியுறுத்தற் கம்பிகளுக்கும், கொங்கிறீற்றுக்கும் இடையே சிறந்த பிணைப்பை எற்படுத்த முடியாமை.
4) சிறந்த செயல்படுதகவுள்ள கொங்கிறீற்றை தயாரிக்க முடியாமை.
5) மேற்குறிப்பிட்ட எல்லாக் குறைபாடுகளும்.

66. கட்டடத்தை அமைக்கும் போது இடத்தில் (Insitu) கொங்கிறீற்றை இட்டு கொங்கிறீற் உறுப்புக்களை அமைப்பதற்கு பதிலாக முன்வார்ப்பு கொங்கிறீற்று அலகுகள் பயன்படுத்துவதில் அதிகளவு நாட்டம் காணப்படுகின்றது. இதற்கு பிரதான காரணம் (05)

1) முன்வார்ப்பு கொங்கிறீற் அலகு உற்பத்தி கைத்தொழில் சிறப்பாக விருத்தி அடைந்திருத்தல்.
2) இடத்தில் கொங்கிறீற்றின் உறுப்புக்களை இடும் பொழுது அமைப்புக்கும் மாலமைப்புக்கும் (Form work) அதிகளவு செலவு ஏற்படல்.
3) இடத்தில் கொங்கிறீற் உறுப்புக்களை தயாரிக்கும் போது பண்பு நியமங்களை குறித்த விதத்தில் பேணுதல் கடினமாக இருக்கின்றமை.

4) முன்வார்ப்பு கொங்கிறீற் அலகு உற்பத்தியில் பயன்படும் மால்வேலை அமைப்புக்களை திரும்ப திரும்ப பயன்படுத்தல்.

5) இடத்தில் கொங்கிறீற் உறுப்புக்களை வார்ப்பதால் பண்படுத்தல் வேலையை இலகுவாக செய்யக் கூடியதாக இருத்தல்.

67. கொங்கிறீட் கலந்த உரிய இடத்தில் இடும் பொழுது அது பயன்படும் இடத்துக்கு தக்கதாக கலவை விகிதம் மாறுபடுகின்றது. உதாரணமாக வலுவூட்டிய கொங்கிறீற்றின் கலவை விகிதம் 1 : 2 : 4(20) ஆக எடுக்கப்படுகின்றது. இது இக்கலவையின் தரம் 20 (Grade 20) என அழைக்கப்படுகின்றது. இதற்கான காரணம் (05)

1) கொங்கிறீற்றின் கலவை தாங்கும் அமுக்கபலம் 20kN/mm^2

2) கொங்கிறீற்றின் கலவை தாங்கும் அமுக்க பலம் 20N/mm^2

3) கொங்கிறீற் கலவைக்கான சல்லியின் (கரட்டுத்திரள்களின்) அளவு 20mm

4) கொங்கிறீற் தாங்கும் அமுக்கபலம் 20N/cm^2

5) கொங்கிறீற் தாங்கும் அமுக்க பலம் 20kN/cm^2

68. எளிய ஆதாரங்களின் மீது இருக்கும் மீள்வலுவூட்டிய கொங்கிறீட் வளை ஒன்றின் உயர்ந்த பட்ச இழுவைத் தகைப்பு தாக்குவது (05)

1) வளையின் மேற்பரப்பில்.
2) வளையின் இருமுனைகளில்
3) வளையின் நடுநிலை அச்சில்
4) வளையின் கீழப்பக்கத்தில் நடுவில்
5) ஆதாரங்களுக்கு அண்மையில்

69. கொங்கிறீற்றின் செற்படு தகவை அதிகரிப்பதற்கான காரணி (05)

a. கலவைக்கு தேவையான நீரின் அளவும், வெளிவெப்ப நிலையை தடுத்தலும்.
b. பாவிக்கப்படும் கரட்டுத்திரள்களின் தோற்றமும், பருமனும்
c. பாவிக்கப்படும் நுண்திரள்களின் தரப்படுத்தலும், தோற்றமும்
d. மேற்குறிப்பிட்ட யாவும்.

1) a 2) b 3) c
4) d 5) a, b, c, d

70. ஒரு கொங்கிறீட்டின் பாகமானது தயாரிக்கப்பட்ட பின் நீரில் இடப்படுகிறது (curing) இதற்கான காரணம் (05)

a. கொங்கிறீற் காயாமல் இருத்தல்.
b. இரசாயன தாக்க மூலம் வெப்பம் வெளியேற்றலை தடுத்தல்.
c. சாதகமான பாதிப்புக்களில் இருந்து கொங்கிறீற்றை பாதுகாத்தல்.
d. வெளிப்பரப்பை கடினமாக்கி உட்கொங்கிறீற்றுக்கு போதுமான பாதுகாப்பு அளித்தல்.

1) a 2) b 3) c
4) d 5) a, b, c, d யாவும்

71. கொங்கிறீட் உற்பத்தி செய்யும்போது பயன்படுத்தப்படும் நுண்திரள் (Fine Aggregate) கள் தொடர்பான மிகச் சரியான கூற்று (03)

1) அவை பல்வேறுபட்ட துணிக்கைப் பருமனைக் கொண்டதாக இருத்தல்.
2) ஒரே அளவு துணிக்கைப் பருமன் உடையதாக இருத்தல்.
3) மிகவும் நுண் துணிக்கைகளை மட்டுமுடையதாய் இருத்தல்.
4) களித்தன்மையாயிருத்தல்.
5) தூசுத் துகள்களைக் கொண்டிருத்தல்.

72. மீள்வலியுறுத்தல் கொங்கிறீட்டில் பயன்படுத்தப்படும் 10mm அளவினைக் கொண்ட முறுக்குக்கம்பி ஒன்றின் இழுவை வலிமையானது. (01)

1) 200N/mm^2 2) 240N/mm^2 3) 425N/mm^2
4) 500N/mm^2 5) 650N /mm^2

73. கொங்கிறீட் கலவை ஒன்றில் இடை நிரப்பிகளாக பயன்படுத்தப்படுவது (01)

1) சீமெந்து 2) நுண்திரளைகள் 3) தூயநீர்

4) நிறமூட்டிகள் 5) மேற்கூறிய எல்லாம்

74. வலுவூட்டப்பட்ட கொங்கிறீட் லின்டல் / விட்டக்கல் (Lintol) ஒன்றுக்கு இரு உருக்குக் கம்பிகள் இடப்பட்டது எனின் அவற்றிற்கான சரியான அமைவிடம் (01)

1)  2)  3)  4)  5) 

75. கொங்கிறீட்டின் வலிமையுடன் தொடர்புபடாத காரணி பின்வருவனவற்றில் எது? (03)

1) நீர்ச்சீமெந்து விகிதம் 2) மூலப்பொருட்களின் தூய்மை

3) பதப்படுத்தும் காலமும், முறையும் 4) கழிவு நீர் தொகுதியின் தன்மையும், பராமரிப்பும்

5) கொங்கிறீட்டை இடுதலும், அதிர்வூட்டலும்

76. பின்வருவனவற்றுள் கொங்கிறீற் இன் வகை அல்லாதது? (02)

1) வார்ப்பு கொங்கிறீட் (Pre cast) 2) Mass கொங்கிறீட்

3) R/F கொங்கிறீட் (வலுவூட்டிய) 4) Base கொங்கிறீட்

5) யாவும் பிழை

77. மேற்படி கொங்கிறீட் வளை அமைப்பிற்கான வலியுறுத்திகள் அமைக்கப்பட வேண்டிய பகுதி (14)



1)  2)  3)  4)  5) 

78. சீமெந்து உற்பத்தியின் போது உருவாக்கப்படும் சிக்கலான சேர்வை அல்லாதது (03)

1) C_2S 2) C_3S 3) C_4AF
4) C_3AF 5) C_3A

79. நிர்மாண வேலைகளில் பயன்படுத்தும் நீரின் தூய்மை இன்மையால் ஏற்படுவது (11)

1) சிறந்த நீரேற்றச் செயற்பாடு.
2) நீரேற்றத்தின் போது அதிக வெப்ப வெளியீடு.
3) இறுகும் போது விரைவாக இறுகுதல்.
4) அருவருக்கத்தக்க தோற்ற விளைவுகளை ஏற்படுத்துதல்.
5) தீந்தையுடன் சிறப்புற தொழிற்படல்.

80. சாதாரண போட்லண்ட் சீமெந்து கலக்கப்படும் பொழுதிலிருந்து கொங்கிறீட் இடப்படும் காலம் வரையும் ஒரு உயர்வான அடைவுக் காலத்தைக் கொண்டுள்ளது. இந்த உயர்வான அடைவுக்காலம் (10)

1) 45 நிமிடங்கள் 2) 3 மணித்தியாலம் 3) 1 மணித்தியாலயம்
4) 30 நிமிடங்கள் 5) 15 நிமிடங்கள்

81. 1875g சீமெந்து பசை (Cemen pas e) தயாரிக்க பயன்படும் நீரின் அளவு 375g எனின், நீர்ச் சீமெந்து விகிதம் யாது? (09)

1) 20% 3) 25% 3) 30%
4) 35% 5) 40%

82. மானிப் பெட்டி (Gauge Box) தொடர்பான பின்வரும் கூற்றுக்களுள் பிழையானது (07)

1) இது சாந்துக்கலவை, கொங்கிறீட்டுக் கலவை என்பவற்றுக்கு தேவையான மூலப் பொருட்களை அளவீடு செய்வதற்கு பயன்படுத்தப்படுகின்றது.
2) கல், மண் என்பன அளவீடு செய்யும் பெட்டியின் உயரம் 250mm ஆகும்.
3) சீமெந்தை அளவீடு செய்யும் பெட்டியின் உயரம் 290mm ஆகும்.
4) இப் பெட்டிகள் தூக்குவதற்கு வசதியாக நீளமான கைபிடிகள் பொருத்தப்பட்டிருக்கும்.
5) இப்பெட்டிகள் பித்தளையினால் உற்பத்தி செய்யப்பட்டவையாகும்.

83. கட்டட அமைப்பில் மண்ணின் தாங்கு திறனை அதிகரிக்கக் கூடிய முறை (05)

a. மண்ணை இறுக்கலாம் (compact)
b. ஆழத்தை அதிகரிக்கலாம்.
c. மணல் முளைக்குற்றிகளை பயன்படுத்தலாம் (Sand piles)
d. அத்திவார அகலத்தை கூட்டலாம்.

இவற்றுள் சரியான கூற்றுக்கள்

1) a, c மட்டும் 2) b, d மட்டும் 3) a, b, d மட்டும்
4) b, c, d மட்டும் 5) a, b, c, d எல்லாம்.

84. கட்டிட வேலைகளில் கம்பிகளை இணைக்கப் பயன்படுத்தப்படும் கட்டுக் கம்பியின் (Binding Wires) தாங்கும் பெறுமானம் யாது? (03)

1) 14 2) 32 3) 18
4) 20 5) 22

85. பின்வருவனவற்றில் "தொலமைட்டை" பயன்படுத்தும் சந்தரப்பம் (03)

1) சட்டி, பானை உற்பத்தி 2) செங்கல், ஓடு உற்பத்தி
3) கறியுப்பு உற்பத்தி 4) மரப்பொருட்களை பதப்படுத்தல்.
5) சுண்ணாம்பு உற்பத்தி

86. களஞ்சியப்படுத்தப்பட்டுள்ள சீமெந்து தொடர்பில் பின்வரும் கூற்றுக்களை ஆராய்க. (03)

a. ஒவ்வொரு வாரமும் சீமெந்துப் பைகளை புரட்டி மீளஅடுக்குதல் வேண்டும்.
b. மட்டமான ஈர நிலத்தில் அடுக்கப்படுதல் வேண்டும்.
c. ஒரு அடுக்கில் 20 பைக்கற் வரை உயர அடுக்கலாம்.
d. முதலில் உள்வந்தவை முதலில் வெளிச் செல்லல் வேண்டும்.

1) a, b, c, d எல்லாம் சரி 2) a, b மட்டும் சரி
3) b, c மட்டும் சரி 4) a, b, c மட்டும் சரி
5) a, d மட்டும் சரி

செங்கல்

87. செங்கற்களில் காணப்படும் இயல்புகள் தொடர்பாக பின்வரும் கூற்றுக்களில் பிழையானது (11)
   1) அதன் முகப்புப்பக்கம் சமனானதாக இருத்தல் வேண்டும்.
   2) மேற்பரப்பில் பொருமல், வெடிப்பு என்பன இருத்தல் கூடாது.
   3) செங்கல் ஒன்றின் சாதாரண எடை 3.2kg ஆகும்.
   4) 24 மணித்தியாலங்களில் நீரை உறிஞ்சும் தன்மை அதன் நிறையிலும் 20% இற்கு மேற்படலாகாது.
   5) விளிம்புகள் நேரானதாக இருத்தல் வேண்டும்.

88. நியமச் செங்கல்லைப் பயன்படுத்தி கட்டப்படும் கிடைக்கல் கட்டுமானம் ஒன்றில் செங்கல்லின் பார்வைப் பக்கத்தின் அளவு எனக் கருதக்கூடியது. (03)
   1) 215 x 65mm 2) 225 x 65mm 3) 215 x 75mm
   4) 102.5 x 65mm 5) 112 x75mm

89. சுமைதாங்கும் சுவர்களை அமைப்பதற்கு சாதகமான செங்கல் கட்டுமான வகை (03)
   1) தலைக்கல் கட்டு 2) கடைக்கல் கட்டு 3) உடைகல் கட்டு
   4) ஆங்கிலக்கட்டு 5) தோட்டக் கட்டு

90. நியம அளவினைக் கொண்ட செங்கல் ஒன்றின் உயரம் எனக் கருதக்கூடியது (01)
   1) 215mm 2) 225mm 3) 102.5mm
   4) 65mm 5) 75mm

91. நியம செங்கல் ஒன்றின் அளவுகள் எனக் கொள்ளக் கூடியது - (mm இல்) (03)
   1) 215 x 105 x 75 2) 215 x 102.5 x 75 3) 215 x 102.5 x 65
   4) 225 x 102.5 x 65 5) 225 x 115 x 75

92. செங்கல் சுவரில் இருக்க வேண்டிய ஓர் அடிப்படை இயல்பு அல்லாதது யாது? (10)
   1) சாந்து இடைவெளிகள் சமமாக இருத்தல் வேண்டும்.
   2) கிடை மூட்டுக்கள் ஒரே வரிசையில் இருத்தல்.
   3) சுவரின் அகலம் எப்போதும் சீராக இருத்தல்.
   4) ஒவ்வொரு வரியினதும் உயரம் சமமாக இருத்தல் வேண்டும்.
   5) நிலைக்குத்து மூட்டுக்கள் ஒரே வரிசையில் இருத்தல்.

93. அதிகமாக செங்கல் சுடப்பட்டால் (10)
   A - இளம் கபில நிறமாக காணப்படும்.
   B - மிகவும் கடினமாக இருக்கும்.
   C - நிறை கூடியதாக இருக்கும்.
   D - வெடிப்பு ஏற்படும்.
   இவற்றுள் சரியானது / சரியானவை
   1) A மட்டும் 2) A, B, C சரி 3) A, B, D சரி
   4) B, C சரி 5) யாவும் சரி

94. தரமான செங்கற்களை இனங்காண்பதற்கு பின்வரும் முறைகளில் எவை பயன்படுத்தப்படுகின்றன? (09)
   A - ஒரு 24 மணித்தியால காலத்தின் போது உயர்ந்தபட்ச நீர் உறிஞ்சலானது செங்கல் நிறையின் 20% இற்கு மட்டுப்படுத்தப்பட வேண்டும்.
   B - சுத்தியலால் செங்கற்களை தட்டும் போது உலோகத்தில் தட்டும் போது கேட்கும் ஒலியை எழுப்புதல் வேண்டும்.
   C - நியம செங்கல்லின் அளவிற்குரிய பரிமாணங்களை கொண்டிருக்க வேண்டும்.
   D - 5m உயரமான இடத்தில் இருந்து செங்கல்லை விழ விடும்போது உடையக்கூடாது.
   1) A, B மட்டும் 2) A, B, C மட்டும் 3) A, C, D மட்டும்
   4) B, C, D மட்டும் 5) A, B, C, D எல்லாம் சரி

95. 

படத்தில் காட்டப்பட்ட நியமக் குறியீடு வகைக்குறிப்பது (07)

1) செங்கல் சுவர்
2) கொங்கிறீட் சுவர்
3) வன் அகணி நிரப்புதல்.
4) கண்ணாடிப் பகுதி
5) தொடர்பறைகள்

96. 

மேலுள்ள தோற்றத்தைத் தரக்கூடிய செங்கல் கட்டுமான வகை எனக் கருதக்கூடியது (07)

1) தலைக்கல்கட்டு
2) கிடைக்கல்கட்டு
3) பிளாந்தேசக்கட்டு
4) ஆங்கிலக்கட்டு
5) தோட்டக்கட்டு

97. SLS நியமத்தை உடைய செங்கல் ஒன்றின் அளவு எனக்கொள்ளக் கூடியது (08)

1) 225 x 115 x 75mm
2) 220 x 105 x 65mm
3) 215 x 102.5 x 65mm
4) 215 x 105 x 75mm
5) 225 x 102.5 x 65mm

98. அருகிலுள்ள உருவில் காட்டப்பட்டுள்ள உருவமானது (07)

1) தவளைக்கல்
2) எருமை மூக்குக் கல்லு
3) இராசமுடி
4) இராணி முடி
5) மேற்சொன்ன எவையுமல்ல.



99. பாவனைக்குகந்த செங்கல் தொடர்பானவை (06)

A - செங்கல்லின் நீளம் அதன் உயரத்தின் மூன்று மடங்கிற்கும் சாந்து இடைவெளிகள் இரண்டினதும் நீளத்துக்கும் சமனாகும்.

B - செங்கற்கள் ஒன்றுடன் ஒன்று மோதும்போது உலோக ஒலி ஏற்படுகின்றது.

C - செங்கல்லின் அடர்த்தி அண்ணளவாக $1.9gcm^{-3}$ இற்குச் சமம்.

மேற்குறித்தவற்றில் சரியான கூற்று / கூற்றுக்கள்

1) A மாத்திரம்
2) A, B ஆகியன மாத்திரம்
3) A, C ஆகியன மாத்திரம்
4) B, C ஆகியன மாத்திரம்
5) A, B, C ஆகியன எல்லாம்.

The National e-learning Portal for The General Education

கட்டுமானம்

100. பின்வருவனவற்றுள் கட்டிடப் பொருட்களில் காணப்படும் பொறிமுறை இயல்பு அல்லாதது (11)

1) இழு விசை Tension
2) உருகுதன்மை Fusibility
3) மீள்தன்மை Elasticity
4) வன்மை Hardness
5) மின் தடைத்திறன் Electrical resistance

101. கட்டிடங்களை அமைக்கும் போது பின்பற்ற வேண்டிய சட்ட விதிகளை கட்டுப்படுத்துவதற்கான அதிகாரத்தைக் கொண்ட அமைப்பு (11)

1) இலங்கை வீடமைப்பு அதிகாரசபை
2) இலங்கை கலால் திணைக்களம்
3) இலங்கை நிர்மாணிகள் சங்கம்
4) உள்ளூராட்சி மன்றங்கள்
5) இலங்கை பொறியியல் கூட்டுத்தாபனம்

102. ஒரு கட்டடத்தின் நிர்மாணிப்பில் பயன்படுத்தப்படும் நிர்மாணப் பொருட்களினால் ஏற்படுத்தப்படும் சுமை எனக் கருதக்கூடியது (11)

1) மாய்சுமை
2) உயிர்ப்புச்சுமை
3) காற்றுச்சுமை
4) இயற்கைச்சுமை
5) மேற்சொன்ன எவையுமில்லை.

103. உமது பாடசாலைக் கட்டிட அமைப்பில் காணப்படும் சுமை தாங்கும் சுவர் தொடர்பாக ஏற்றுக்கொள்ளக் கூடிய கூற்று (11)

1) சுவரின் தடிப்பு 100mmக்கு மேற்படலாகாது.
2) சுவரின் தடிப்பு 150mm முதல் 225mm வரையில் அமையக்கூடாது.
3) நீடிசைக்கட்டு கட்டுமானம் சிறந்த ஒரு முறையாக அமையாது.
4) தலைக்கல் கட்டுமானம் சிறந்த ஒரு முறையாக அமையும்.
5) சுமைதாங்கும் சுவரின் ஆகக்கூடிய உயரம் எனக் கொள்ளக்கூடியது 1m ஆகும்.

104. வேலைத்தளங்களில் பாதுகாப்பை பேணுவதற்காக மேற்கொள்ளும் நடவடிக்கை அல்லாதது? (09)

1) மேற்பார்வையாளர்கள் வரும்போது மட்டுமாவது பாதுகாப்பு உபகரணங்களை பாவித்தல்.
2) வேலைத்தளத்திற்குரிய ஒழுக்க விதிமுறைகளை பேணிவருதல்.
3) செய்யும் வேலை தொடர்பாக சரியான விளக்கத்துடனும் முழுக் கவனத்துடனும் செயற்படல்.
4) செய்யும் வேலைக்குப் பொருத்தமான கருவிகள், உபகரணங்களைப் பயன்படுத்தல்.
5) பொருத்தமான ஆடையணிகளைப் பயன்படுத்தல்.

105. நிர்மாணம், பயிற்சிகள் மற்றும் அபிவிருத்திக்கான நிறுவனம் (ICTAD) இன் செயற்பாடு அல்லாதது (07)

1) நிர்மாண வேலைகளிற்கான விபரக் கூற்றை வரையறுத்தல்.
2) வேலைகளிற்கான படிமுறைகள், தரம் என்பவற்றை வரையறுத்தல்.
3) ஒப்பந்தகாரர்களை தரப்படுத்தி அனுமதி அட்டைகள் வழங்குதல்.
4) நிர்மாண வேலைகளிற்கான பட்டயப் பொறியியலாளர்கள் பெயர்ப்பட்டியலை ஆண்டு தோறும் பொதுமக்களிற்கு வெளியீடு செய்தல்.
5) ஒப்பந்த கேள்வி ஆவணங்கள் தொடர்பான நடைமுறைகளை வெளியீடு செய்து நிருவகித்தல்.

106. கட்டடம் ஒன்றின் வெளிச்சம், காற்றோட்டம், அமைவு போன்ற விடயங்கள் தொடர்பான சட்ட திட்டங்களை நடைமுறைப்படுத்தி அனுமதிகளை வழங்குவது (07)

1) அரசாங்க அதிபர் பணிமனை
2) பிரதேசச் செயலாளர் பணிமனை
3) உள்ளூராட்சி மன்றங்கள்
4) மின்சார சபை
5) நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை

107. இலங்கையில் காற்றுச்சுமை அதிகமாகத் தொழிற்படும் மாகாணங்கள் (08)

1) வடக்குக் கிழக்கு மாகாணம்
2) மேல், சப்பிரகமுவ மாகாணம்
3) ஊவா, கிழக்கு மாகாணம்
4) வடமத்திய, வடக்கு மாகாணம்
5) மேற்கூறிய எல்லா இடங்களிலும்

108. சாந்தைத் தேவையான எவ்வடிவத்திற்கும் அமைக்கத் தேவைப்படும் இயல்பு (12)

1) இழுவை இயல்பு *2) நெகிழ்வு* *3) பயன்பாடு*
4) நீடிறன் *5) நெருக்கு இயல்பு*

109. சுவர்வளை அமைக்க பயன்படும் மரத்தின் அளவு (14)

1) 100 x 50mm *2)* 100 x 75mm *3)* 100 x 25mm
4) 100 x 100mm *5) மேற்சொன்ன எவையுமில்லை.*

110. பின்வரும் கூற்றுகள் ஓர் எந்திரவியற் செங்கல் தொடர்பானவை. (12)

A - *ஒரு செங்கல்லின் நீளம் அதன் அகலத்தின் இரு மடங்கிற்கும் மூட்டின் நீளத்திற்கும் சமம்.*

B - *ஒரு செங்கல் நீரில் 24 மணித்தியாலங்களுக்கு அமிழ்த்தப்படும் போது நீர் உறிஞ்சல் செங்கல்லின் உலர் நிறையின் அண்ணளவாக* $\frac{1}{5}$ *இற்கு மேற்படுதலாகாது.*

C - *செங்கற்கள் ஒன்றையொன்று அடிப்பதற்கு விடப்படும்போது ஓர் உலோக ஒலி உண்டாகின்றது.*

மேற்குறித்தவற்றில் சரியான கூற்று / கூற்றுக்கள்

1) A *மாத்திரம்* *2)* A, B *ஆகியன மாத்திரம்*
3) A, C *ஆகியன மாத்திரம்* *4)* B, C *ஆகியன மாத்திரம்*
5) A, B, C *ஆகிய எல்லாம்.*

111. நியமச் செங்கல்லைப் பயன்படுத்தி கட்டப்படும் கிடைக்கல் கட்டுமாணம் ஒன்றில் செங்கல்லின் பார்வைப் பக்கத்தின் அளவு என கருதக்கூடியது. (14)

1) 215 x 65mm *2)* 225 x 65mm *3)* 215 x 75mm
4) 102.5 x 65mm *5)* 112.5 x 75mm

112. இங்கிலிசுக் கட்டைப் பயன்படுத்தி அமைத்த ஒரு செங்கற் சுவரின் அம்சம் (13)

1) கவிவு ஒரு செங்கல்லின் கால்வாசியாக இருத்தல்.
2) ஒவ்வொரு வரியும் ஒரு செங்கல்லின் அரைவாசியுடன் முடிவடைதல்.
3) நிலைக்குத்து மூட்டுகள் வரிசையாக இருத்தல்.
4) ஓர் இராணி முடிப்பு தலைக்கல் வரியில் இடப்படுதல்.
5) சுவரின் குறைந்தபட்ச அகலம் அரைவாசிச் செங்கல்லாக இருத்தல்.

113. பின்வரும் உருக்களில் சில செங்கற் கட்டு வகைகள் காணப்படுகின்றன. (12)



(A) *(B)* *(C)* *(D)*

இங்கு A, B, C, D *ஆகியவற்றில் காணப்படும் கட்டு வகைகள் முறையே*

1) இங்கிலிசு, பிளெமிசு, நீடிசைக்கல், தலைக்கல் *2) இங்கிலிசு, நீடிசைக்கல். தலைக்கல், பிளெமிசு*
3) இங்கிலிசு, நீடிசைக்கல், பிளெமிசு, தலைக்கல் *4) நீடிசைக்கல். பிளெமிசு, இங்கிலிசு, தலைக்கல்*
5) தலைக்கல், பிளெமிசு, நீடிசைக்கல், இங்கிலிசு

114. காட்டப்பட்டுள்ள பின்வரும் செங்கற் கட்டுகளில் ஒரு நீடிசைக்கற் கட்டின் முகப்பு நிலைப்படத்தைக் காட்டும் உருவைத் தெரிக. (13)



(1) *(2)* *(3)* *(4)* *(5)*

115. ஒரு கட்டடத்திற்கு சுவர் முடிப்புகளைப் பயன்படுத்துவதன் சில நோக்கங்கள் கீழே தரப்பட்டுள்ளன. (13)

A - சுவர்களுக்கு ஓர் ஒப்பமான முடிப்பைத் தருகின்றமை.

B - சுவரின் வலிமையைக் கூட்டுகின்றமை.

C - சுவரைக் கட்டும்போது ஏற்படும் குறைபாடுகளை மறைக்கின்றமை.

D - ஒரு பாதுகாப்பான மேற்பரப்பைத் தருகின்றமை.

மேற்குறித்த நோக்கங்களில் சரியானவை

1) A, B ஆகியன மாத்திரம்
2) B, C ஆகியன மாத்திரம்
3) C, D ஆகியன மாத்திரம்
4) A, D ஆகியன மாத்திரம்
5) B, D ஆகியன மாத்திரம்

116. செங்கல் சுவர் அமைப்பு வேலைக்கு பயன்படுத்தப்படாத உபகரணம் (13)

1) மேசன் கரண்டி
2) மணியாசுக்கட்டை
3) தூக்குக்குண்டு
4) நீர்மட்டம்
5) வேணியர்மானி

117. அரைவட்டமாக முடிக்க உத்தேசிக்கப்பட்ட சுவரை அமைக்க பயன்படுத்த வேண்டிய பொருத்தமான கட்டுமான முறை (05)

1) ஆங்கிலக் கட்டு
2) பிளமிசுக்கட்டு
3) கிடைக்கல்கட்டு
4) தலைக்கல்கட்டு
5) நீடிசைக்கட்டு

118. பொதுவாக கொங்கிறீட் கற்களைப் பயன்படுத்தி உள்ளூர் மேசன்மாரால் கட்டப்படும் சுவர்களிற்கான கட்டுமான முறை (03)

1) தலைக்கல் கட்டுமானம்
2) கிடைக்கல் கட்டுமானம்
3) ஆங்கிலக் கட்டுமானம்
4) பிளமிசுக் கட்டுமானம்
5) டச்சுக் கட்டுமானம்

119. செங்கல்லில் காணப்படும் குறைபாடு அல்லாதது (03)

1) சீரான அளவுகளை உடையதாக இருத்தல்.
2) அதிகமாக சுடப்படுதல்.
3) தாவரக் கழிவுகளால் ஏற்படும் பொருக்கு அடையாளம்.
4) வெற்றிடம் ஏற்படல்.

120. செங்கல் கட்டுமானம் ஒன்றில் 'இராணிமுடி' பயன்படுத்தப்பட்டுள்ளது எனின், அக்கட்டுமானம் ஆனது (01)

1) தோட்டக்கட்டுமானம்
2) நீடிசைக்கல் கட்டுமானம்
3) தலைக்கல் கட்டுமானம்
4) ஆங்கிலக் கட்டுமானம்
5) மேற்கூறிய எவையுமல்ல.

121. செங்கல் சுவர் ஒன்றின் முகப்பு தோற்றத்தில் தலைக்கல், நீடிசைக்கல் ஆகிய இரண்டும் ஒரே வரிசையில் காணப்படுமாயின் அக்கட்டுமான வகை (10)

1) இங்கிலீசுக்கட்டு
2) தலைக்கட்டு
3) நீடிசைக்கற்கட்டு
4) பிளமிசுக்கட்டு
5) டச்சுக்கட்டு

122. பிளமிசுக் கட்டு முறையில் கட்டப்பட்ட 1B அகலமுள்ள செங்கோண சுவர் மூலையின் முதல் வரியின் கிடைப்படத்தை சரியாகக் காட்டும் உரு யாது? (10)

1) 

2) 

3) 

4) 

5) 

123. பின்வரும் செங்கல் கட்டுமானத்தில் சில தகவல்கள் தரப்பட்டுள்ளன. இவற்றுள் பிழையான கூற்று எது? (09)



A B

1) A, B பிளமிசு கட்டுமானம் ஆகும்.
2) A, B ஆங்கிலக் கட்டுமானம் ஆகும்.
3) A, B இல் சுவரின் தடிப்பு 1B ஆகும்.
4) A, B அங்கிலக்கட்டின் அடுத்த அடுத்த வரிக்குரிய கிடைப்படங்கள் ஆகும்.
5) A, B இனை இணைத்து உருவாக்கும் சுவரின் நீளஅடைப்பு / கவிவு ஆனது செங்கல்லின் நீளத்தின் 1/4 பங்கிற்கு சமமாகும்.

124. நியம செங்கல்லைப் பயன்படுத்தி கட்டப்படும் நீடிசைக் கல்லிணைப்பு (Stretcher bond) கட்டுமானம் ஒன்றில் பார்வைப்பக்க பரிமாணமாக அமைவது (06)

1) 225mm x 75mm
2) 215mm x 65mm
3) 102.5mm x 65mm
4) 225mm x 65mm
5) 102.5mm x 75mm

125. பின்வரும் செங்கல் கட்டுமானத்தில் சில தகவல்கள் தரப்பட்டுள்ளன. இவற்றுள் சரியான கூற்று எது? (05)



a b

1) a பிளமிசுக்கட்டு
2) b ஆங்கிலக்கட்டு
3) a, b யும் பிளமிசுக்கட்டு
4) a, bயும் ஆங்கிலக்கட்டு
5) a, bயும் பிழையான கட்டுக்கள்

126. உட்சுவர்களுக்குக் காரையிடும்போது ஓர் ஒப்பமான முடிப்பை பெறுவதற்குப் பயன்படுத்தப்பட வேண்டிய சீமெந்து : சுண்ணாம்பு : மணல் ஆகியவற்றுக்கிடையே மிகவும் உகந்த விகிதம் (12)

1) 1 : 1 : 5
2) 1 : 2 : 5
3) 1 : 2 : 4
4) 1 : 1 : 2
5) 1 : 3 : 6

127. கட்டுமாணத் திரவியங்களின் இயல்புகள் எனக் கருத முடியாதது (07)

1) மின் இயல்புகள்
2) பொறிமுறை இயல்புகள்
3) பௌதீக இயல்புகள்
4) இரசாயன இயல்புர்கள்
5) நொருங்கும் இயல்புகள்

128. தீந்தை உற்பத்தியில் ஒன்றான காவி பொருத்தமான மூலப்பொருள் (08)

1) செவ்வீயம்
2) ஆளிவிதை எண்ணெய்
3) நாக ஒட்சைட்டு
4) காரீயம்
5) மண்ணெண்ணை

129. பின்வருவோரில் பாதுகாப்பு ஒழுங்கு முறையினைப் பின்பற்றி சுமை ஒன்றினை உயர்த்தும் சிறந்த வேலைத் தளப் பழக்கவழக்கமுடையவர்களைக் கொண்ட விடைத்தொகுதி (05)



A B C D E F

1) A, B, E, F
2) B, C, D
3) B, C, E
4) C, D, A
5) A, B, F

130. நீறுதல் செயற்பாட்டின் போது சுண்ணாம்பில் ஏற்படும் மாற்றம் அல்லாதது (01)

1) வெப்பம் வெளியேறுதல். 2) கனவளவு அதிகரித்தல். 3) ஒலி வெளிவிடுதல்
4) நீராவி வெளியேறுதல் 5) மென்நீல நிற படலம் தோன்றுதல்.

131. ஒரு கட்டிடத்தின் கூரையிலிருந்து அடி அத்திவாரம் வரையான கட்டிடத்தினால் ஏற்படுத்தப்படுவது (01)

1) மாய்சுமை 2) உயிர்ப்புச்சுமை 3) காற்றுச்சுமை
4) வேறு சுமைகள் 5) மேற்சொன்ன எவையுமில்லை.

132. வடமாகாணத்தில் ஓட்டுத் தொழிற்சாலை அமைந்துள்ள இடம் (03)

1) காங்கேசன்துறை 2) துணுக்காய் 2) ஒட்டிசுட்டான்
4) முருங்கன் 5) கந்தரோடை

133. சாதாரண கட்டிடம் ஒன்றை நிர்மானிக்கும் முன்னர் அதற்கான சட்டபூர்வமான அனுமதியினை வழங்கும் நிறுவனம் (01)

1) கட்டிடங்கள் திணைக்களம் 2) பொறியியல் மதியுரையகம்
3) உள்ளூராட்சி சபைகள் 4) வடிவமைப்பாளர் ஒன்றியம்
5) படவரைஞர்

134. நிர்மாணிப்புத் தளம் ஒன்றில் (Construction site) வெள்ளை, நீலம், மஞ்சள் நிறங்களையுடைய தலைக் கவசங்கள் (Helmet) அணிந்த நபர்களைக் காணக்கூடியதாக இருந்தது. மேற்குறித்த நிறங்களின்படி அவர்களுடைய தொழில்கள் (02)

1) வேலையாட்கள் (Labours), பொறியியலாளர் (Engineers), மேற்பார்வையாளர் (Supervisor)
2) மேற்பார்வையாளர், வேலையாட்கள், பொறியியலாளர்
3) பொறியியலாளர், மேற்பார்வையாளர். வேலையாட்கள்
4) வேலையாட்கள், மேற்பார்வையாளர், பொறியியலாளர்
5) யாவும் பிழை

135. சாதனத்தைக் கையாளும் போது முற்பாதுகாப்பு பின்பற்றுதல் வேண்டும். ஏணியைக் காவுவதற்கான பாதுகாப்பான முறையை படங்களில் இருந்து தெரிவு செய்க. (03)

A.



B.



C



D.



E.



1) A, D 2) A, C 3) A, B
4) C, D 5) E, C

நீர் வடிகால் அமைப்பு

136. படத்தில் காட்டப்பட்டுள்ள குறியீடு பின்வருவனவற்றுள் எதனைக் குறிப்பிடுகிறது? (01)



1) படலை வால்வு
2) குண்டு வால்வு
3) காப்பு வால்வு
4) காற்று வால்வு
5) திருகுப்பிடி வால்வு

137. குழாய் திருத்துனர் ஒருவர் உபயோகிக்கும் கருவிகள் / உபகரணங்கள் யாவை? (02)

1) உலோகமரியும் வாள் (Hack saw)
2) ஊது விளக்கு (Blow lamp)
3) குழாய்ச்சாவி (Pipe wrench)
4) சீர் செய்யும் புரியாணிச்சாவி (Spanner)
5) யாவும் சரி

138. வீட்டு நீர் வழங்கல் வடிகாலமைப்பு பிரயோகங்கள் அடிப்படையில் முழங்கை வளைவு பயன்படுத்துவதன் நோக்கம் (10)

1) நீர்ப்பாச்சலின் கதியை அதிகரிக்க.
2) நீர்ப்பாச்சலின் திசையை அனுப்ப.
3) நீரை தாங்கிக்கு அனுப்ப.
4) நீர் ஒரே திசையில் பாய.
5) நீரின் அமுக்கதை அதிகரிக்க.

139. நீர் சுத்திகரிப்பின் போது இடம்பெறும் படிமுறைகளின் ஒழுங்கினைக் கொண்ட தொகுதி (09)

1) காற்றூட்டல், படியச் செய்தல், திரளச் செய்தல், வடித்தல், கிருமி நீக்கல்
2) காற்றூட்டல், கிருமி நீக்கல், திரளச் செய்தல், வடித்தல், படியச் செய்தல்
3) காற்றூட்டல், திரளச் செய்தல், படியச் செய்தல், வடித்தல், கிருமி நீக்கல்
4) திரளச் செய்தல், காற்றூட்டல், திரளச் செய்தல். வடித்தல், கிருமி நீக்கல்
5) திரளச் செய்தல். காற்றூட்டல், திரளச்செய்தல். வடித்தல், கிருமி நீக்கல்

140. நீர் விநியோகத் திட்டங்களில் கிருமிநீக்கம் செய்வதற்காகப் பயன்படுத்தப்படும் சிறந்த முறை (08)

1) வடிகட்டுதல்
2) கொதிக்க வைத்தல்
3) சூரியஒளி பாய்ச்சுதல்
4) அமிலம், காரங்களை சேர்த்தல்
5) குளோரின் சேர்த்தல்

141. வீட்டு நீர் வழங்கல், கழிவு நீர் வடிகால் அமைப்பு தொடர்பாக சில விடயங்கள் கீழே தரப்பட்டுள்ளன. இவற்றில் பிழையான கூற்று என நீர் கருதுவது (05)

1) நீர்த்தாங்கிகளில் இருந்து நீரை வழங்க, படலை வால்வு, (Gate value) பயன்படுத்தப்படுகின்றது.
2) நீரில் நிலையில் வன்மை (Temporary Hardness) என்பது காபனேற்றுக்களால் ஏற்படுகின்றது.
3) வடிகால் அமைப்புக்களில் ஆட்புலங்கள் அமைப்பது (Manhole) கழிவு நீர் ஓட்டத்தை நிலைப்படுத்து வதற்காக
4) கழிவுநீர் வடிகால் அமைப்பில் கழிவுநீரானது அழுக்குத் தொட்டியில் இருந்து உறிஞ்சல் தொட்டிக்கு அனுப்பப்படும்.
5) பொதுவாக நீர்தாங்கி அமைக்கப் பயன்படும் கொங்கிறீட் கலவை விகிதம் $1 : 1\frac{1}{2} : 3$ ஆகும்.

142. நீர் அகற்றல் (Disposal) முறைமை பற்றிய சரியான கூற்றைத் தெரிந்தெடுக்க. (13)

1) வடிகாற் பாதையின் திசையை மாற்றும்போது ஆட்பிலம் (Manhole) பயன்படுத்தப்படுகின்றது.
2) வடிகாற் பாதை எப்போதும் பொது கழிபொருள் அகற்றலுடன் (Sewerage) தொடுக்கப்படுகின்றது.
3) வடிகாற் பாதை எப்போதும் அழுக்குத் தொட்டியுடன் (Septic tank) தொடுக்கப்படுகின்றது.
4) நீர் கட்டிய கழிவுப் பொருளுக்கும் மலசலகூடக் கழிவுக்கும் புறம்பான வடிகாற் பாதைகளை ஏற்படுத்த வேண்டும்.
5) வடிகாற் பாதையின் உரிய இடைவெளிகளில் நீர் பொறிகளை (water trap) அல்லது கான்குழிப் பொறிகளை (gulley trap) இடவேண்டும்.

* **படத்தில் இருந்து 8ம், 9ம் வினாக்களிற்கு விடை தருக.**

143.



மேலுள்ள படத்தில் காட்டப்பட்டுள்ளது இலங்கையில் உற்பத்தி செய்யப்படும் (11)

1) வார்ப்பிரும்பு குழாய்
2) கல்வனைசுக் குழாய்
3) களிமண்ணாலான குழாய்
4) பிளாத்திக்காலான குழாய்
5) மேம்படுத்தப்பட்ட செப்புக்குழாய்

144. உருவில் XXXX *என அடையாளமிடப்பட்ட பகுதிக்குரிய அடையாளமாகப் பொறிக்கப்பட வேண்டியது (11)*

1) இக் குழாயின் முழு நீளம் - நீள மீற்றரில் (Lm)
2) இக் குழாயின் குறுக்கு விட்டம் - மில்லிமீற்றரில் (mm)
3) இக் குழாயின் தொகுதி இலக்கம்
4) இக் குழாயின் உற்பத்திப் பெயர்
5) இக் குழாய் தாங்கக்கூடிய அமுக்கம் KPa *இல்*

The National e-learning Portal for The General Education

நில அளவியல்

145. A, B என்னும் இரு நகர்களுக்கிடையே உள்ள தூரம் 25km ஆகும். 1 : 250 000 அளவிடைக்கு வரையப்பட்ட ஒரு தேசப்படத்தில் இந்நகர்களுக்கிடையே உள்ள நேரத் தூரம் (12)

1) 1mm 2) 2.5mm 3) 1cm
4) 2.5cm 5) 10cm

146.



மேலே காட்டப்பட்ட படமானது மலைப்பாங்கான பிரதேசமொன்றின் உயரம் அளவிடை செய்யும் போது மட்டமானி, மட்டக்கோல் என்பவற்றின் நிலைகள், வாசிப்புக்கள் ஆகும். இத்தரவில் இருந்து பின்வரு வனவற்றுள் பிழையானது? (14)

1) IH இன் உயரம் 91.30m ஆகும். 2) FS_1 இன் வாசிப்பு 2.52m ஆகும்.
3) BS_2 இன் வாசிப்பு 2.15m ஆகும். 4) TP_2 திரும்பல் புள்ளியாகும்.
5) TP_2 இல் ஒடுக்கியமட்டம் 88.59m ஆகும்.

147. நியம ஒளிச் சீவுளி பற்றித் தீர்மானிக்கும்போது பயன்படுத்தப்படும் கோணம் (12)

1) $61\frac{1}{2}^{0}$ 2) $62\frac{1}{2}^{0}$ 3) $63\frac{1}{2}^{0}$
4) $64\frac{1}{2}^{0}$ 5) $65\frac{1}{2}^{0}$

148. ஓர் ஐங்கோணத் தியோடலைற்றுப் போகு 1:1000 அளவிடைக்கு வரையப்பட்டபோது இறுதி வழு 0.12mm ஆகும். வரைபு முறையைப் பயன்படுத்தி இவ்வழு அளவையீட்டுத் தானங்களிடையே பரப்பப்பட்டதெனின், மூன்றாம் அளவையீட்டுத் தானம் எவ்வளவினால் இடம்பெயர்க்கப்பட வேண்டும்? (13)

1) 0.024mm 2) 0.048mm 3) 0.072mm
4) 0.096mm 5) 0.120mm

149. ஒரு மட்டமாக்கல் நடைமுறையில் பெற்ற சில வாசிப்புகள் கீழே காணப்படுகின்றன. (எல்லா வாசிப்பு களும் மீற்றரிலாகும்) (13)

மட்டத் தானம்	பின்னோக்கு வாசிப்பு	இடைநோக்கு வாசிப்பு	முன்நோக்கு வாசிப்பு
1	2.41		
2		1.58	
3			2.67

மூன்றாம் மட்டத் தானத்தின் மாற்றிய மட்டம் 52.63m எனின், முதல் தானத்தின் மாற்றிய மட்டம்

1) 51.54m 2) 52.37m 3) 52.89m
4) 53.46m 5) 53.72m

150. ஒரு வீட்டில் ஊறவைக்கும் கிடங்கிற்கும் (Soakage pit) கிணற்றுக்குமிடையே உள்ள தூரம் (13)

1) ஒரு வீதிக் கோட்டின் ஓர் ஒழுங்குவிதியாகும்.
2) ஒரு வெளிச்சக் கோணத்தின் ஓர் ஒழுங்குவிதியாகும்.
3) ஒரு வடிகால் தொகுதியின் ஓர் ஒழுங்குவிதியாகும்.
4) உள்ளூராட்சி மன்றத்தின் ஓர் ஒழுங்குவிதியாகும்.
5) வங்கிக் கடன்களுடன் சம்பந்தப்பட்ட ஓர் ஒழுங்குவிதியாகும்.

151. மில்லிமீற்றரில் அளவுகோடிடப்பட்டுள்ள ஓர் உருக்கு வரைகோலைப் பயன்படுத்தி நீளத்தை அளக்கும்போது வாசிப்பு வாசிக்கப்பட வேண்டிய கிட்டிய பெறுமானம் (13)

1) 1mm 2) 0.5mm 3) 0.25mm
4) 0.1mm 5) 0.05mm

152. B, C, E என்னும் வரைப்பாட்டுப் புள்ளிகளுக்கு அளவைக் கோடு AD இலிருந்து எடுக்கப்பட்ட செங்குத்து எதிரமைப்புகளைக் கொண்ட அளவையாளரின் புல ஏட்டுக்குறிப்பு கீழே தரப்பட்டுள்ளது.
பல்கோணி வடிவ நிலம் ABCDEA இன் பரப்பளவு (12)

		D		
		40.0		
		35.0	10.0	C
E	10.0	20.0		
		5.0		
		0.0	10.0	A
		A		

1) $450m^2$ 2) $500m^2$
3) $350m^2$ 4) $600m^2$
5) $650m^2$

153. ஒரு சங்கிலி அளவையீட்டுப் பணிக்கான நோட்டமறி அளவையீட்டில் பின்வருவனவற்றில் ஒரு தீர்மானமாக அமையாதது (13)
1) அளவையீட்டுத் தானங்களின் எண்ணிக்கை.
2) அளவையீட்டுக் கோடுகளின் அமைவுகள்.
3) அளவையீட்டிற்குத் தேவையான உபகரணங்கள்.
4) நில அம்சங்களுக்காக அளவீடுகளைப் பெறுவதற்குப் பயன்படுத்திய முறைகள்.
5) பயன்படுத்தப்படும் முக்கோணிகளின் எண்ணிக்கை.

154. ஒரு சங்கிலி அளவையீட்டிற்கான பிரதான அளவைக் கோட்டைத் (மூலக் கோடு) தெரிந்தெடுக்கும் போது கருத்திற் கொள்ள வேண்டிய சில விடயங்கள் ஒரு மாணவனால் பின்வருமாறு குறித்துக் கொள்ளப்பட்டன.(13)
A - கோட்டின் கிடைத் தூரத்தை நேரடியாக அளக்கத்தக்கதாக இருத்தல் வேண்டும்.
B - உரிய முக்கோணிகள் நன்றாக அமைந்த முக்கோணிகளாக இருத்தல் வேண்டும்.
C - நில அம்சங்களுக்காகப் பல அளவீடுகளை எடுக்கத்தக்கதாக இருத்தல் வேண்டும்.
D - அது ஒரு காணியின் எல்லைக்கு அண்மையில் செல்ல வேண்டும்.
மேற்குறித்த கூற்றுகளில் சரியானவை
1) A, B ஆகியன மாத்திரம் 2) A, D ஆகியன மாத்திரம் 3) B, C ஆகியன மாத்திரம்
4) B, D ஆகியன மாத்திரம் 5) C, D ஆகியன மாத்திரம்

155. 

அருகில் உள்ள அமைப்பானது தடங்களைச் சுற்றிச் செல்ல முடியாத சந்தர்ப்பங்களில் நீளங்களை அளவிட சங்கிலி நில அளவையியல் முறையில் பயன்படுத்தப்படும் ஒரு முறையாகும். இங்கு CG - 200m ஆகவும் GD - 50 mஆகவும் FD - 60m ஆகவும் இருப்பின் CB நீளம் யாது? (14)
1) 60m 2) 70m 3) 240m
4) 890m 5) 120m

156. ஒரு மீற்றர் கோலின் மூலம் ஒரு குறித்த நீளம் அளக்கப்பட்ட அதே வேளை அவ்வளவீடு 5m ஆகும். பின்னர் சோதிக்கும் போது அக்கோலின் உண்மை நீளம் 0.05m இனால் குறைந்திருப்பதாகக் காணப்பட்டது. அதற்கேற்ப அளக்கப்பட்ட நீளத்தின் உண்மை நீளம் (13)
1) 4.75m 2) 4.95m 3) 5.00m
4) 5.05m 5) 5.25m

157. சங்கிலி அளவையீடு தொடர்பான பின்வரும் கூற்றுகளைக் கருதுக. (12)
A - பயன்படுத்தப்படும் எல்லா அளவைத் தானங்களும் ஒன்றிலிருந்தொன்று தெளிவாகக் கட்புலனாக இருத்தல் வேண்டும்.
B - பயன்படுத்தப்படும் முக்கோணிகள் நன்கு உருவாக்கிய முக்கோணிகளாக இருத்தல் வேண்டும்.
C- பயன்படுத்தப்படும் முக்கோணிகளின் பக்கங்களின் நீளங்கள் இயன்றவரை சமமாக இருத்தல் வேண்டும்.
மேற்குறித்தவற்றில் சரியான கூற்று / கூற்றுகள்
1) B மாத்திரம் 2) A, B ஆகியன மாத்திரம் 3) A, C ஆகியன மாத்திரம்
4) B, C ஆகியன மாத்திரம் 5) A, B, C ஆகிய எல்லாம்.

158. ஒரு தியோடலைற்று போகில மூன்று அளவைத் தானங்களிலிருந்து அளக்கப்பட்ட அடைகோணங்கள் முறையே $08^0\ 53'\ 40''$, $38^0\ 12'\ 20''$, $32^0\ 53'\ 45''$ ஆகும். இங்கு ஏற்பட்ட வழுவைத் திருத்துவதற்குப் பிரயோகிக்க வேண்டிய மொத்தத் திருத்தம் (12)

1) -15″ 2) -05″ 3) 00″

4) +05″ 5) +15″

159. 30m நீளமுள்ளதாக 600m ஆக இருந்தது. எனினும் சங்கிலியின் உண்மை நீளம் 30m இலும் பார்க்க 0.5m எனும் அளவினால் குறைந்தது என பின்னர் அறியப்பட்டது. இதற்கேற்ப இரு இடங்களுக்கு இடையான சராசரி தூரம் யாது? (10)

1) 595m 2) 601m 3) 605m

4) 599m 5) 610m

160. மட்டம் காணல் (Levelling) செயன்முறையில் பெற்ற ஐந்து வாசிப்புக்கள் முறையே 0.450m, 1.700m, 1.460m, 0.660m, 0.750m ஆகும். இங்கு மூன்றாம் வாசிப்பை பெற்ற பின் மட்ட உபகரணம் முன்நோக்கி கொண்டு செல்லப்பட்டது. முதலாம் மட்டமாக்கல் இடத்தில் மாற்றிய உயரம் 106.50m எனின், ஐந்தாம் வாசிப்பு பெறப்பட்ட இடத்தின் மாற்றிய உயரம் யாது? (10)

1) 105.20m 2) 105.15m 3) 105.40m

4) 106.90m 5) 107.50m

161. உருவில் நில அளவையாளரின் புல ஏட்டு குறிப்பில் இருந்து பெயர்த்தெடுத்த ஒரு பகுதி காணப்படு கின்றது. அதன் எல்லா அளவீடுகளும் மீற்றரிலாகும். ABCDEFG. Aயினால் எல்லைப்படுத்தப்படும் நிலப்பகுதியின் கிடைப்படம் 1:1000 அளவிடைக்கு வரையப்படும் போது அதன் பரப்பளவு சதுர சென்ரிமீற்றரில் (10)

1) 10.0 ஆகும்
2) 95.0 ஆகும்.
3) 100.0 ஆகும்.
4) 9.5 ஆகும்.
5) 90.0 ஆகும்.

	D		
	30	20	E
	20	20	D
G 30	10	20	C
	0	10	B
	A		

162. ஒரு நாற்பக்கல் மூடிய போக்கின் அகக்கோணங்களின் பருமன் 1 தியோடலைற்றினால் அளக்கப்பட்டது. அவை $10^0\ 00'\ 20''$, $67^0\ 00'\ 20''$, $92^0\ 00'\ 40''$, $98^0\ 00'\ 40''$ ஆக இருந்தன. விகித சம முறையின் மூலம் போகின் வழுக்களை திருத்துவதற்கு ஓர் அகக்கோணத்திற்கு பிரயோகிக்க வேண்டிய செம்மை (10)

1) $-00^0\ 01'\ 20''$ ஆகும் 2) $+00^0\ 00'\ 20''$ ஆகும். 3) $-00^0\ 00'\ 30''$ ஆகும்.

4) $+00^0\ 01'\ 20''$ ஆகும். 5) $-00^0\ 02'\ 00''$ ஆகும்.

163. சங்கிலி அளவையீடு பற்றிய பிழையான கூற்றைத் தெரிந்தெடுக்க. (10)

1) சமதளக் காணிகளை அளக்க மிகவும் உகந்தது.
2) பல்வேறு இடங்களில் தொடர்பு அமைவைத் துணிவதற்கு எதிரிமைப்பு முறை பயன்படுகின்றது.
3) பெரிய நிலப்பகுதிகளை அளக்கப் பயன்படுவதில்லை.
4) அடிப்படை கொள்கை முக்கோணியாக்கல் ஆகும்.
5) அளவீடுகளின் செம்மையை சோதிப்பதற்கு பிணி கோடுகள் பயன்படுததப்படும்.

4. அழுத்த வேறுபாட்டைக் குறைப்பதற்கு
5. மேற்கூறிய யாவும் பிழை

92. காற்றமுக்கியின் (Compressor) வகை / வகைகள்? (02)

1. Turbine 2. Reciprocating 3. Rotary 4. 1 உம் 3. உம் 5. 2 உம் 3 உம்

93. தொடக்கி மோட்டார் மூலம் என்ஜின் நன்றாக சுழல செய்யப்பட்டாலும் என்ஜின் தொடங்கவில்லை இதற்கு காரணம் (03)

1. கியர் கவரில் தடைப்பட்டிருக்கின்றமை
2. தீப்பொறி செருகிகள் இடையே கழிவு பொருள் படிந்திருக்கின்றமை
3. பற்றரியில் மின்னேற்றம் குறைந்திருக்கின்றமை
4. பற்றரியின் பிடி (கட்டை) மிகவும் இறுக்கமாக இருக்கின்றமை
5. பற்றரியின் பிடி (கட்டை) தளர்வாக இருக்கின்றமை

94. நான்கு அடிப்பு வாகனம் ஒன்றில் எரிபற்றல் சுருளின் மூலம் செய்யப்படுவது (03)

1. உயர் வோல்ற்றளவை உற்பத்தி செய்தல்
2. உயர் ஓட்டத்தை உற்பத்தி செய்தல்
3. உயர் வோல்ற்றளவை பகிர்தல்
4. உயர் ஓட்டத்தை பகிர்தல்
5. மின் பொறியை உருவாக்கல்

95. நான்கடிப்பு டீசல் இயந்திரத்தில் டீசலை வழங்கும் பகுதி எது (04)

1. காபன்சேர் கருவி
2. உட்பாய்ச்சும் பம்பி
3. தீப்பொறிச் செருகி
4. வால்வு
5. முசலம்

96. டீசல் என்ஜின் ஒன்றின் எரிபொருள் தொகுதியில் உள்ள ஏதேனும் ஒரு பகுதி கழற்றப்பட்டு இருந்தால் அந்த என்ஜினை இயங்கச் செய்வதற்கு (10)

1. வெப்பச் செருகியை புதிதாக மாற்ற வேண்டும்.
2. காற்றுத் துடைப்பணத்தை புதிதாக போடுதல் வேண்டும்.
3. மின் கலத்தினை புதிதாக போடுதல் வேண்டும்
4. தொகுதியில் உள்ள காற்றை முழுமையாக அகற்ற வேண்டும்.
5. யாவும் சரி

97. நேரடி டீசல் உறிஞ்சியெடுத்தல் முறையில் உட்பாச்சி (Injector) பொருத்தப்பட்டுள்ள இடம் (08)

1. உள்ளீட்டுக் குழாய்
2. வெளியீட்டுக் குழாய்
3. உருளைத் தலை
4. உருளைக் கட்டை (Cylinder Block)
5. மேற்கூறிய எதுவும் அல்ல.

98. பெற்றோல் இயந்திரம் ஒன்றின் காபுறேற்றரில் தடுக்கி வால்வு (Choke) பயன்படுத்தப்படுவதன் நோக்கம் (08)

1. பிரதான குழாயின் மூலம் வெந்தூரிக்கு எரிபொருள் செல்வதைக் கட்டுப்படுத்துவதற்கு
2. காபுரேற்றரினுள்ளே புகும் வளியின் அளவினைக் கட்டுப்படுத்துவதற்கு
3. சோம்பிச் சந்தர்ப்பங்களில் வாகனத்தை இயங்கு நிலையில் வைத்திருப்பதற்கு
4. எரிபொருளையும் வாயுவையும் கலப்பதற்கு
5. வளி தூய்தாக்கியினூடாக காபுரேற்ரரினுள் புகும் வளியின் வேகத்தைக் கூட்டுவதற்கு

99. டீசல் எரிபொருள் உட்பாய்ச்சல் பம்பியின் பிரதான தொழில் (09)

1. உறிஞ்சல் அடிப்பின்போது உள்ளெடுப்புப் பல்கிளையத்திற்கு எரிபொருளை உட்பாய்ச்சுதல்
2. தகன அறைக்கு எரிபொருளை விசிறுதல்
3. உட்பாய்ச்சியைத் திறந்து பல்கிளையத்திற்கு எரிபொருளை விசிறுதல்
4. தகன அறைக்கு சரியான நேரத்தில் சரியான அளவு எரிபொருளை உட்பாய்ச்சுதல்
5. உருளைகளிடையே எரிபொருளை விநியோகித்து எரிபொருளை எரிபற்றச் செய்தல்

100. எரிபொருள் வழங்கல் தொகுதியில் ஒரு பகுதியாக அமையாதது (01)

1. பம்பி
2. எரிபொருள் மிதக்கும் அறை
3. எரிபொருள் தாங்கி
4. வடிகட்டி
5. காபன் சேர் கருவி

101. ஆர்முடுகலின் போது எஞ்சின் தவறுகின்றது அதற்கு கிட்டிய காரணம் (01)

1. கிளச் மிதி மிதிக்கப்பட்டிருக்கின்றமை
2. தடுப்பு தொகுதியில் வழு இருக்கின்றமை
3. காபன் சேர் கருவி தக்கவாறு அமைக்கப்படாமை
4. வால்வு வில் தக்கவாறு அமைக்கப்படாமை
5. வால்வு இழக்கம் அதிகமாக இருத்தல்

102. தீப்பொறிச் செருகியைக் கழற்றியதன் பின் துப்பரவு செய்யும் சரியான ஒழுங்குமுறையைத் தெரிவு செய்க. (14)

1. பெற்றோலை நிரப்பி எரித்தல், மணல் கடதாசியினால் தேய்த்தல், இடைவெளியைச் சீர்செய்தல், பொருத்துதல்.
2. இடைவெளியைச் சீர்செய்தல், கம்பித் தூரிகையொன்றினால் துப்பரவு செய்தல், பெற்றோலினால் கழுவுதல், பொருத்துதல்.
3. கம்பித்தூரிகையொன்றினால் துப்புரவு செய்தல், பெற்றோலினால் கழுவுதல், காற்றுப் பிடித்தல், இடைவெளியை சீர்செய்தல், பொருத்துதல்.
4. பெற்றோலினால் கழுவுதல், கம்பித்தூரிகையொன்றினால் துப்புரவு செய்தல், எரித்தல், காற்றுப் பிடித்தல், இடைவெளியை சீர்செய்தல்.
5. கம்பித்தூரிகையொன்றினால் துப்புரவு செய்தல், எரித்தல், காற்றுப் பிடித்தல், இடைவெளியைச் சீர்செய்தல், பெற்றோலினால் கழுவுதல்

ஊடுகடத்தல் தொகுதி

103. பிடியினூடே (கிளச்சு) வலு ஊடுகடத்தல் நடைபெறுவது. (07)

1. வலுச்சில்லு மற்றும் பிடிதட்டு ஆகியவற்றின் மேற்பரப்புகளுக்கு இடையிலான அழுத்தத்தினாலாகும்.
2. வலுச்சில்லு மற்றும் பிடிதட்டு ஆகியவற்றின் மேற்பரப்புகளுக்கு இடையிலான நெருக்கலினாலாகும்.
3. வலுச்சில்லு மற்றும் பிடிதட்டு ஆகியவற்றின் மேற்பரப்புகளுக்கு இடையிலான உராய்வினாலாகும்.
4. பிடிதட்டு மற்றும் அமுக்கத்தட்டு ஆகியவற்றின் மேற்பரப்புகளுக்கு இடையிலான உராய்வினாலாகும்.
5. வலுச்சில்லு மற்றும் அமுக்கத்தட்டு ஆகியவற்றின் மேற்பரப்புகளுக்கு இடையிலான உராய்வினாலாகும்.

104. பின்வரும் படத்தில் காட்டப்பட்டுள்ள Alignment tool ஆனது கிளச்சைப் பொருத்தும் போது எதற்குப் பயன்படுகின்றது. (08)

1. Pressure Plate ஐயும் Clutch ஐயும் நடு நிலைப்படுத்துவதற்கு
2. Pressure Plate ஐயும் Flywheel ஐயும் நடு நிலையாக்குவதற்கு
3. Flyewheel ஐயும் Flywheel ஐயும் நடு நிலையாக்குவதற்கு
4. Clutch Plate தேய்வடைவதைத் தடுப்பதற்கு
5. பொருந்தும்போது தூக்குவதற்கு



105. இரு கியர்கள் தொடுகையில் இணைத்து இயங்கும் போது (02)

A. அவற்றின் சுழற்சிகள் எதிர் எதிர்த் திசையில் இருக்கும்
B. அவை ஒவ்வொன்றினதும் சுழற்சிக்கதியானது அவற்றின் விட்டத்திற்கு நேர்மாறு விகித சமன்
C. சுழற்சிகதி பற்களின் எண்ணிக்கைக்கு நேர் விகித சமன்
இவற்றுள் சரியான கூற்றுக்கள்?

1. A உம் B உம்
2. B உம் C உம்
3. A மட்டும்
4. A உம் B ம் C உம் சரி
5. யாவும் பிழை

106. வட்டக்கோல் வட்ட (Epicyclic) கியர் பெட்டியின் பயன்பாடு பின்வரும் எச் செயற்பாடு / செயற்பாடுகளிற்கு பெரிதும் உதவுகின்றது? (02)

1. புகை வண்டிகளில்
2. மேல் நோக்கிய இயக்கத் தொகுதியில்
2. கிடை இயக்கத் தொகுதியில்
4. சுழற்சி இயக்கத் தொகுதியில்
5. யாவும் பிழை.

107. தன்னியக்க துணைப்பொறிப் பெட்டியைக் கொண்டமைந்த வாகனங்களில் பயன்படுத்தப்படும் வகை எது ? (04)

1. திரவப் பிடி
2. மைய நீக்கப்பிடி
3. பல்தட்டுப்பிடி
4. மென்றகட்டுப்பிடி
5. வாயுப்பிடி

108. வார் அல்லது கியர் தொகுதியைப் பயன்படுத்துவதன் மூலம்

A- வலுவை அதிகரிக்கச் செய்யலாம்
B - கதியை அதிகரிக்கலாம்
C - கதியைக் குறைக்கலாம்
D - முறுக்கு திறனை அதிகரிக்கச் செய்யலாம்

பின்வரும் கூற்றுக்களில் எது / எவை சரியானது / சரியானவை? (10)

1. A
2. A, B ஆகியன
3. A,B,C ஆகியன
4. B,C,D ஆகியன
5. A,B,D ஆகியன

109. ஓட்டித் தண்டிலிருந்து (Propeller shaft) கிடைக்கும் முறுக்குத் திறனை செலுத்தும் சில்லுக்கு ஊடுகடத்தும்செயற்பாட்டுக்குப் பயன்படுவது (06)

1. அச்சிணைப்பற்சக்கரம்
2. சுருளித்துணை பற்சக்கரம்
3. தரங்கு பற்சக்கரம்
4. எத்தன பற்சக்கரம்
5. சுருளித் திருகுப் பற்சக்கரம்

110. பின்வருவனவற்றில் ஊடு கடத்தல் தொகுதிக்குரியது (10)

1. குளிரூட்டும் தொகுதி, தொங்கு தொகுதி, மின்னேற்றத் தொகுதி
2. துணைப்பொறிப் பெட்டி, பிடி, வேற்றுமைப்படுத்தி
3. எரிபொருள் பம்பி, நீர்ப்பம்பி, எண்ணெய் பம்பி
4. தடுப்புத் தொகுதி, மின் தொகுதி, மின்னேற்றத் தொகுதி
5. அடிச்சட்டகம், கூடல் சுக்காணப் பொறிப் பெட்டி

111. சராசரிக் கதியுடன் மின் மோட்டார் ஒன்றிலிருந்து தண்டொன்றுக்கு வலு செலுத்தப்படுவதற்கான பொருத்த மான முறை (10)

1. வார்ப்பட்டி இயக்கி
2. சங்கிலி இயக்கி
3. பாளிக் கூட்டிணைப்பும் சாவியும்
4. நீட்டோர கூட்டிணைப்பு
5. நீட்டோர கூட்டிணைப்பும் சாவியும்

112. அருகே படத்தில் காட்டப்பட்டுள்ள பக்கோவின் (Back Khoe) A யினால் குறிக்கப்பட்டுள்ள வாளியை இயக்குவதற்கு இயந்திரத்திலிருந்து வலு பெறப்படுகின்றது. இவ் வலு வாளிக்கு ஊடுகடத்தப்படும் பிரதான முறை பின்வருவனவற்றில் எது? (11)



1. சங்கி மூலமான வலு ஊடுகடத்தல் மூலம்
2. வார்ப்பட்டி மூலமான வலு ஊடுகடத்தல் மூலம்
3. வளி மூலமான வலு ஊடுகடத்தல் மூலம்
4. திரவம் மூலமான வலு ஊடுகடத்தல் மூலம்
5. பற்சில்லு மூலமான வலு ஊடுகடத்தல் மூலம்

113.



மாணவன் ஒருவன் சுற்றும் சில்லு ஒன்றினை நிறுத்த மேற்கூறிய பரிசோதனையை ஒழுங்குபடுத்தி இருந்தான். இவ் அமைப்பு முறையில் பயன்படுத்தப்பட்ட தடுப்பு முறை யாது? (02)

1. A.B-S முறை
2. Disk தடுப்பு முறை
3. Hydraulic தடுப்பு முறை
4. Air தடுப்பு முறை 5. யாவும் சரி

114. Hydraulic Brake இன் தன்மைகள் பற்றிய பின்வரும் கூற்றுக்களில் சரியானது / சரியானவை (02)

1. எளிமையான கட்டமைப்பு
2. சமனான அழுத்தம்
3. விசைப் பெருக்கம் கூடியது
4. அதிக நம்பகத்தன்மை
5. யாவும் சரி

115. பின்வருவனவற்றுள் ABS தடுப்புத் தொகுதியில் இருக்கும் நன்மைகள் ஆவன? (08)

1. முன்சில்லில் தடுப்பு விசையை அதிகரித்தல்
2. வளைவுகளில் செல்லும்போது வாகனத்தை வழுக்காமல் பாதுகாத்தல்
3. ஓட்டுனரின் சொகுசு தன்மையை அதிகரித்தல்
4. எவ்வகையான பாதையிலும் தடுப்பைப் பிரயோகிக்கும் போது வாகனத்தை சீராக வைத்திருத்தல்
5. தடுப்பு மிதியானது அழுத்துவதற்கு இலகுவாக இருத்தல்

116. இறுதி இயக்கமானது (Final Drive) உந்தித் தண்டில் இருந்ததான வலுப்பாச்சலை? (02)

1. 45^{0} திருப்பும் 2. 180^{0} திருப்பும் 3. 60^{0} திருப்பும்
4. 90^{0} திருப்பும் 5. யாவும் பிழை

117. வாகனம் ஒன்றில் காணப்படும் வேறுபடுத்தியின் (Differential) செயற்பாடு யாது? (02)

1. வாகனத்தின் அதிர்வைக் குறைத்தல்
2. வாகனத்தின் தடுப்பை (Brake) அதிகரித்தல்
3. சுக்கானை (Steering) இலகுவாக கையாள
4. வேறுபட்ட கதிகளை சக்கரங்களுக்கு வழங்குதல்
5. வாகனத்திற்கு வேறுபட்ட மின்சாரங்களை வழங்க.

118. பின்வரும் இயந்திரப் பாகங்களுள் வேற்றுமைப்படுத்தியுடன் தொடர்புடைய பாகம் அல்லாதது. (08)

1. சூரியச் சில்லு (Sun Wheel) 2. உடுச்சில்லு (Star Wheel)
3. முடிப்பற்சில்லு (Crowin Wheel) 4. சிறு பற்சில்லு (pinion Wheel)
5. பிறையுரு பற்சில்லு (U Wheel)

119. பின்வரும் கூற்றுக்களை கருதுக.

A. வழுக்கி சுழற்று பொறிநுட்பம் (Slider Crank Mechanism) முன்பின் இயக்கத்தைச் சுழல் இயக்கமாக மாற்றுகின்றது.

B - சுழற்சிக் கதிகள் சிறிய அளவுகளில் மாற்றப்பட வேண்டியபோது சர்ப்பமும் சில்லும் (Worm and Wheel) பயன்படுத்தப்படுகின்றன.

C- தாங்குக் கியர்கள் (Bevel Gears) ஒரு செங்குத்துத் திசைக்குச் சுழல் இயக்கத்தை ஊடுகடத்துவதற்கு மாத்திரம் பயன்படுத்தப்படுகின்றன.

இக் கூற்றில் சரியானது / சரியானவை (12)

1. A மாத்திரம் 2. B மாத்திரம் 3. C மாத்திரம்
4. A B ஆகியன மாத்திரம் 5. A, C ஆகியன மாத்திரம்

120. மோட்டர் வாகனங்களின்தொழில்நுட்பவியல் தொடர்பான சரியான கூற்று (12)

1. மோட்டார் வாகனம் முற்றாக நிற்கும் வரைக்கும் ABS தொகுதி எல்லாச் சில்லுகளிலும் தொடர்ச்சியாக தடுப்புகளைப் பிரயோகிக்கின்றது.
2. தயரில் குறைவாக காற்று செலுத்தப்படும்போது அதன் மைய மேற்பரப்பு விரைவாக தேய்கின்றது.
3. மசகு எண்ணெய்ப் பம்பி மசகெண்ணெயை அமுக்குவதனால் ஒரு சிறிய அறையினுள்ளே அதிக அளவு எண்ணெயைத் தேக்கி வைத்தல் சாத்தியமாகும்.
4. பயணிகளின் கூடுதலான பாதுகாப்பிற்காக ஒரு மோட்டார் வாகனத்தின் முகப்புப் பிரதேசம் கூடுதலான உரப்புடன் உற்பத்தி செய்யப்படுகின்றது.
5. ஒரு மோட்டார் வாகனத்தின் பற்றறி முடிவிடங்களைத் தொடுப்பகற்றும்போது மோட்டார் வாகனத்தின் உடலுடன் தொடுக்கப்படும் முடிவிடத்தை முதலில் தொடுப்பகற்றல் பாதுகாப்பானதாகும்.

121. பின்வரும் கூற்றுக்களில் மோட்டார் வாகனத்தின் வலு ஊடுகடத்தல் தொகுதி தொடர்பான சரியான கூற்றினைத் தெரிவு செய்க. (12)

1. சில்லுகளின் விட்டம் கூட்டப்பட்டால் ஒரு மோட்டார் வாகனம் அதிகரித்த கதிகளில் செல்லலாம்.
2. கியர்ப் பெட்டியின் கியர் விகிதம் கூட்டப்படும்போது ஆர்முடுகுவதற்கான ஒரு மோட்டர் வாகனத்தின் ஆற்றல் குறைகின்றது.
3. இறுதிச் செலுத்துகையின் கியர் விகிதம் கூட்டப்படும்போது மோட்டார் வாகனம் ஓர் அதிகரித்த கதியிற் செல்வதற்கான ஆற்றலைக் கொண்டிருக்கும்
4. ஓட்டித் தண்டின் இரு முனைகளிலும் உள்ள இரு சர்வ மூட்டுக்களும் வாகனத்தின் ஆர்முடுகலிற் செல்வாக்குச் செலுத்துகின்றன.
5. பறப்புச் சில்லின் பருமன் ஓர் எஞ்சினில் உள்ள உருளைகளின் அதிகரிக்கும் எண்ணிக்கையுடன் அதிகரிக்கின்றது.

122. ஒரு தானாகவியங்கியின் வலு ஊடுகடத்தல் தொகுதியில் (13)

1. கியர்ப் பெட்டிகளில் முட்கியர்கள் (Spur gear) பயன்படுத்தப்படுவதில்லை.
2. முடிவான செலுத்துகையில் முடிப்பற் சில்லுக்கும் பற்சில்லுக்கும் இடையே சுழற்சிக் கதிக் குறைவு மிகப் பெரிதாகும்.
3. ஒரு முற்சில்லுச் செலுத்துகை வாகனம் வேற்றுமைப் படுத்தியைக் கொண்டிருப்பதில்லை
4. புறமாற்றுக் கியரில் கியர் பெட்டியிலிருந்து மிகக் குறைந்த பெயர் கியர்ப் பகுப்பு பெறப்படுகின்றது.
5. உயர் கதிகளில் வளைவுகளில் திரும்புகையில் வேற்றுமைப் பூட்டுகள் உதவுகின்றன.

123. பின்வரும் EGR தொகுதி தொடர்பான சரியான கூற்று (08)

1. உள்ளீட்டுக் குழாயில் அமுக்கத்தை அதிகரிக்கிறது
2. வெளியீட்டுக் குழாயில் அமுக்கத்தை அதிகரிக்கின்றது.
3. உள்ளீட்டுக் குழாய்க்கு வரும் வாயுவை வெளியீட்டுக் குழாய்க்குள் கலக்கச் செய்கிறது
4. வெளியீட்டு குழாய்க்கு வரும் வாயுவை உள்ளீட்டு குழாய்க்குள் கலக்கச் செய்கிறது
5. தகன அறையில் வெப்பத்தை அதிகரித்தல்.

124. பெற்றோல் வாகனம் ஒன்றின் புகைபோக்கியில் கற்றலிக் கொன்வேட்டர் (Catalyic Converter) பொருத்தப்பட்டமைக்கான மிகச் சரியான காரணம் யாது? (03)

1. சூழலுக்கு வெளியேறும் தீய கதிர்களைத் தடுத்தல்
2. புகையின் அளவையும் செறிவையும் குறைத்தல்
3. Co(காபனோர்ஒக்சைட்)HC(ஹைட்ரோகாபன்)ஆகியவாயுக்களை Co_2 ஆகவும் H_2Oஆகவும் மாற்ற
4. Co_2 ஐ குறைத்து சூழல் வெப்பநிலை அதிகரிப்பைத் தடுக்க
5. Co_2 H_2 ஆகிய வாயுக்களின் செறிவை அதிகரித்து சூழல் பாதுகாப்பை பேண

125. வாகனப் புகை வெளியேற்றும் தொகுதியில் உள்ள மாசாக்கி வாயுவைக் குறைப்பதற்கு வினையூக்கி மாற்றி (Cataylic converter) பொருத்தப்படுகின்றது. இது தொடர்பாக மாணவர்கள் மூவரது கூற்றுக்கள் வருமாறு

A- வினையூக்கி மாற்றியின் பீங்கான் சட்டத்தின் மீது ரேடியமும் பலேடியமும் பூசப்படும்

B - ரேடியம் மற்றும் பிளாட்டினத்தின் மீது ஈயம் படிவது வினையூக்கி மாற்றியினைச் செயற்படுத்தத் தடையாக அமையும்

C- வாகனம் பயன்பாடடைய வினையூக்கி மாற்றி தேய்வடையும்

இவற்றுள் சரியான கூற்று (05)

1. A யும் B யும்
2. A யும் C யும்
3. A மட்டும்
4. B யும் C யும்
5. ABC மூன்றும்

126. மோட்டார் வாகனமொன்றின் படலிகை (Chassis) மீது தொழிற்படும் சுமைகள் சில கீழே காட்டப்பட்டுள்ளன.

A. வாகனத்தின் நிறை, பயணிகளின் நிறை, பொருளின் நிறை
B. மோதிகளைக் (bumps) கடக்கும் போது உஞற்றப்படும் விசைகள்
C. மோதுகை காரணமாக ஏற்படும் விசைகள்
D. என்ஜினின் அதிர்வுகளால் ஏற்படும் விசைகள்

இவற்றுள் சரியான கூற்றுக்களாவன (07)

1. A, B மட்டும்
2. A, D மட்டும்
3. A,B,D மட்டும்
4. A,B,C மட்டும்
5. A,B,C,D ஆகிய எல்லாம்

127. பின்வருவனவற்றில் 8 x 4 ட்ரக் (Trucks) வண்டியின் வரிப்படத்தை சரியாக குறிப்பது (11)

1. 
2. 
3. 
4. 
5. 

128. பின்வரும் படமானது டயரின் தேய்வைக் குறிக்கிறது இதற்கான காரணம் பின்வருவனவற்றுள் யாதாக இருக்கலாம். (08)



1. அதி கூடிய காற்று நிரம்பியிருத்தல்
2. குறைந்த காற்று நிரம்பியிருத்தல்
3. டயர் தயாரிப்பில் ஏற்பட்ட பழுது
4. டயரின் வழமையான தேய்வு
5. நைதரசன் வாயு நிரப்பாமல் விட்டதால் ஏற்பட்ட தேய்வு

129. வர்த்தக வாகனங்களில் உள்ள ஸ்டேரிங் நிலைக்குத்துடன் சாய்ந்திருக்கும் கோணம் அண்ணளவாக.. (02)

1. 10^0 2. 25^0 3. 30^0 4. 24^0 5. 20^0

130. "Power Steering (பவர் ஸ்டேரிங்) என்பது மனித வலுவுடன் எஞ்சின் அல்லது மின் சக்தியும் சேர்த்து பயன்படுத்தப்படுவதாகும். இக் கூற்றின் உண்மைத் தன்மை யாது?

1. சரியானது
2. பிழையானது
3. கூற முடியாது
4. மனித வலு மட்டுமே பயன்படும்
5. அமுக்கத்தின் மூலம் இயக்கப்படுவது.

131. பின்வரும் இயக்கங்களில் எது ஒரு முதன்மை இயக்கமாகக் கருதப்படுவதில்லை? (13)

1. சுழற்சி
2. முன்பின்
3. ஏகபரிமாண
4. முப்பரிமாண
5. அலைவு

132. ஒரு குறித்த பொறியில் ஒரு தட்டை வாரைப் பயன்படுத்தி மோட்டருடன் கியர் பெட்டி இணைக்கப்படுகின்றது. இத்தட்டை வார்ச் செலுத்தலைப் பயன்படுத்தி வலுவை ஊடுகடத்தும்போது

A. மோட்டாருக்கும் கியர் பெட்டிக்குமிடையே ஒரு மாறா ஊடுகடத்தல் விகிதம் பேணப்படுகின்றது.

B. வார் மிகை சுமை ஏற்றத்தின் விளைவாக உள்ள சேதத்தைக் குறைக்கின்றது.

C. வாரின் அகலத்தைக் கூட்டுவதன் மூலம் வாரினால் ஊடுகடத்தப்படும் உயர்ந்தபட்ச வலுவை கூட்டலாம்.

D. ஓர் உராய்வுக் கிளச்சு ஆற்றும் அதே தொழிலை வார்ச் செலுத்தல் செப்பமாக செய்கின்றது.

மேற்குறித்தவற்றுள் சரியான கூற்றுக்கள் (13)

1. A,B ஆகியன மாத்திரம்
2. A,C ஆகியன மாத்திரம்
3. A,D ஆகியன மாத்திரம்
4. B,C ஆகியன மாத்திரம்
5. C,D ஆகியன மாத்திரம்

133. வார் அல்லது கியர்த் தொகுதியைப் பயன்படுத்துவதன் மூலம்

A. வலுவை அதிகரிக்ககச் செய்யலாம்
B. முறுக்குத் திறனை அதிகரிக்கச் செய்யலாம்
C. கதியைக் குறைக்கலாம்
D. கதியை கூட்டலாம்

பின்வருவனவற்றுள் சரியானது? (14)

1. A
2. A, B ஆகியன
3. A,B,C ஆகியன
4. B,C,D ஆகியன
5. A,B,C,D ஆகிய எல்லாம்

134. அகத் தகன எஞ்சினில் பயன்படுத்தப்படும் பறப்புச் சில்லின் பிரதான தொழில் (14)

1. எஞ்சினை கியர் பெட்டியுடன் தொடுத்தல்
2. கிளச்சைக் கியர் பெட்டியுடன் தொடுத்தல்
3. எஞ்சினை இயக்கும் போது தேவைப்படுமெனின் சக்தியை சேமித்து விடுவித்தல்
4. சுழற்றித் தண்டைக் கியர்ப் பெட்டியுடன் தொடுத்தல்
5. எஞ்சினைத் தொடக்குவதற்கு தொடங்கி மோட்டரைத் தொடுத்தல்

135. மோட்டர் வாகனத் தொழில்நுட்பவியலுடன் சம்பந்தப்பட்ட விசேட தொழில்நுட்பங்கள் தொடர்பான சரியான கூற்று யாது? (12)

1. மீயேற்றியின் (Supercharger) தொழிற்பாட்டிற்கு எஞ்சினால் பிறப்பிக்கப்டும் வலு தேவைப்படுவதில்லை.
2. சுழலேற்றி (turbo charger) ஆனது எஞ்சினுக்குப் பின்னூட்டப்படுமுன்பாக வெளியகற்றல் வாயுவை அமுக்கப்படுத்துகின்றது.

*03. வெளியகற்றல் வாயு மீள் சுற்றோட்டத் (*FGR*) தொகுதி மூலம் வெளியகற்றல் வாயுவின் பகுதியை எஞ்சினுக்குப் பின்னூட்டுகின்றமையால் எஞ்சினால் காலப்படும்* Co_2 *இன் ஒட்டுமொத்தமான அளவைக் குறைத்தல் சாத்தியமாகும்.*

*04. வெளியகற்றல் வாயுவில் கொள்ளப்பட்ட துணிக்கைக் காலல் 3 வழி ஊக்கி மாற்றியினால் (*3 way Catalytic Converter*) இழிவளவாக்கப்படுகின்றது.*

05. தகன அறையினுள்ளே இருக்கும் உயர்ந்தபட்ச வெப்பநிலை ஓர் EGR *தொகுதியினால் குறைக்கப்படுகின்றது.*

136. ஒரு மோட்டார் கார்த் தொங்கல் தொகுதியில் பயன்படுத்தப்படும் கூறுகளிடையே சக்தி நட்டத்திற்கு மிகவும் பங்களிப்புச் செய்யும் கூறு (12)

1. அதிர்ச்சி உறிஞ்சி *2. சுருள் வில்* *3. இலை வில்*
4. முறுக்கற் சட்டம் *5. தயர்*

*137. வாகனப் புகை வெளியேற்றும் தொகுதியில் உள்ள மாசாக்கி வாயுவைக் குறைப்பதற்கு வினையூக்கி மாற்றினை (*Catalytic Converter*) பொருத்தப்படுகின்றது. தொழில்நுட்ப வகுப்பொன்றில் உள்ள மூன்று மாணவர்களால் பின்வரும் கூற்றுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.*

A. *ரேடியம் மற்றும் பிளாட்டினத்தின் மீது ஈயம் படிவது வினையூக்கி மாற்றினைச் செயற்படுத்த தடையாக அமையும்*

B. *வாகனத்தின் பயன்பாட்டினால் வினையூக்கி மாற்றி தேய்மானம் அடையும்.*

C. *வினையூக்கி மாற்றியின் பீங்கான் சட்டத்தின் மீது ரேடியமும் பலேடியமும் பூசப்படும்*

இவற்றுள் சரியான கூற்று / கூற்றுகள் (14)

1. A *மட்டும்*
2. A *யும்* B*யும் மட்டும்*
3. A *யும்* C *யும் மட்டும்*
4 B *யும்* C *யும் மட்டும்*
5. A, B, C *ஆகியன யாவும்*

The National e-learning Portal for The General Education

பொறிமுறை வரைதல்

138. அருகில் உள்ள உலோகக் கிண்ணம் ஒன்றை மேலிருந்து கிடைப்பாடாக நோக்கும் போது பெறப்படும் Plan View எது? (11)





139. அருகிலுள்ள காணியின் பரப்பு சதுர மீற்றரில் யாது?

1. 4900
2. 15166
3. 15.166
4. 10266
5. 105166



140. 1 : 50 000 என்ற அளவிடைக்கு வரையப்பட்ட படத்தில் $12cm^2$ பரப்புடைய குளம் ஒன்று தென்படில் அக்குளத்தின் உண்மைப் பரப்பு km^2 இல் யாது? (11)

1. $3km^2$
2. $12km^2$
3. $12 \times 10^{-4} km^2$
4. $12 \times 10^{-10} km^2$
5. $30km^2$

141. தரப்பட்ட உருக்களில் SLS நியமங்களிற்கேற்ப பரிமாணம் காட்டப்பட்டுள்ள உரு (10)



142. பொருளொன்றின் சமவளவுத் தோற்றம் பின்வரும் உருவில் காட்டப்பட்டுள்ளது. X இன் திசையில் அவதானிக்கும் போதான சரியான தோற்றத்தைக் காட்டும் தெரிவு யாது? (மறைநிலைக் கோடுகளைக் கருதத் தேவையில்லை) (07)



143. எந்திரவியல் வரைதலின் ஒரு வகையாகிய சமமான (Isometric) எறியங்கள் ஒரு நிமிர்வரை யெறியத்தின் விபரங்களைத் தெளிவாக விளக்கி நிற்கின்றன. சமமான வரைதலில் சமமான அச்சுக்கும் கிடைத்திசைக்கும் இடையே உள்ள கோணம் (06)

1. 90°
2. 60°
3. 120°
4. 150°
5. 180°

144. பொறிமுறை வரைதலில் மையவச்சு அல்லது சமச்சீரச்சைக் காட்டுவதற்குப் பயன்படுத்தப்படும் நியமக்கோடு (06)

1. தடித்த தொடர்கோடு
2. மெல்லிய தொடர்கோடு
3. முறிந்த கோடுகள்
4. மெல்லிய சங்கிலிக் கோடு
5. தொடர்ச்சியான ஒழுங்கற்றகோடு

145. அளவு A4 ஐ உடைய ஒரு தாளின் நியம அளவீடுகள் (06)

1. 210mm x 148mm
2. 297mm x 210 mm
3. 420mm x 297mm
4. 210mm x 420mm
5. 297mm x 220mm

146. பொறிப் பகுதியொன்றின் நெடுக்கு வெட்டு முகப்பு நிலைப்படம் உருவில் காட்டப்பட்டுள்ளது. இப்படத்திற்குரிய கிடைப்படத்தைத் தெரிவு செய்க.





147. நீள் வளையமொன்றின் பேரச்சு 2D, சிற்றச்சு 2d நீளங்கள் எனில் மையங்களுக்கிடையிலான தூரத்தைக் குறிப்பது? (05)

1. $D - d$
2. $D^2 - d^2$
3. $\frac{D^2-d^2}{4}$
4. $2\sqrt{D^2 - d^2}$
5. $4D^2 + d^2$

148. A,B,C ஆனது தளப் படத்தில் (Plan) சம கிடைத்தூரத்தில் உள்ளனவும், ஒரே நேர்கோட்டிலும் அமைந்தனவும் ஆகும். எனில் அப் புள்ளிகளை பக்கமாக நோக்கும் போது கிடைப்பது பின்வருவனவற்றுள் எது? (05)





149. வட்டம் ஒன்றின் பகுதியாக அமைவது (02)

1. மையம்
2. வட்டத்துண்டு
3. பரிதி
4. ஆரைச்சிறை
5. யாவும்

150. அருகிலுள்ள உருவின் Plan View வைத் தருவது? (03)





151.  ← பார்வைப் பக்கம்

மேலே தரப்பட்டுள்ள உருவின் Plan வரைபடம் பின்வருவனவற்றுள் யாதாக இருக்கலாம்? (02)



152. தொழில்நுட்ப வரைதல் உபகரணங்களிற்கு (Technical Drawing) *மிகச் சிறந்த உதாரணத் தொகுதி யாது? (02)*

1. வரைபுமேசை, T-squre set - Squre
2. பென்சில், அழிப்பான், அடிமட்டம்
3. வரைபு மேசை, காகிதம், Set squre
4. set squre *, அடிமட்டம், பென்சில்*
5. வரைபு தாள், set sure, T squre

153. கீழே தரப்பட்டுள்ள சமவளவுத் தோற்றத்தை A,B *ஆகிய அம்புக்குறிகளின் திசைகளிலிருந்து பார்க்கும்போது காணப்படும் சரியான தோற்றங்கள் (உரு அளவிடைக்கு வரையப்படவில்லை) (12)*



154. பின்வரும் சமவளவு உருவை அம்புக்குறி A *யின் திசையிலும் அம்புக்குறி* B *யின் திசையிலும் பார்க்கும்போது அது தோற்றும் விதம் சரியாக வகைகுறிக்கப்படுவது (உருக்கள் அளவிடைக்கு வரையப்படவில்லை) (13)*



155. அருகிலுள்ள உருவின் கிடைப்படத்தைத் (Plan view) *தருவது? (14)*





156. அளவு A1 *ஐ உடைய ஒரு தாளின் நியம அளவீடுகள் (*A4 *அளவு தாள்* 210mm x 297mm *எனக் கருதுக. (12)*

1. 594mm x 420mm
2. 420mm x 594mm
3. 594mm x 840mm
4. 840 mm x 1188 mm
5. 297mm x 420mm

உபகரணங்களும் கருவிகளும்

157. உணர் கருவியைப் பயன்படுத்தி அளக்கக் கூடியது (10)

1. வேலைப் பொருளின் அகலம்
2. வேலைப் பொருளின் தடிப்பு
3. வேலைப் பொருளின் இடையே உள்ள இடைவெளி
4. வேலைப் பொருட்களின் நீளம்
5. முதலாவதும், இரண்டாவதும் சரியானது

158. அமுக்கத்தினை அளக்கும் மானியினை கொண்டு அளக்கப்பட்ட அமுக்கபெறுமானம் (gauge pressure) 34 psi எனின் தனி அமுக்க (absolute pressure) பெறுமானத்தை காண்க இங்கு வளிமண்டல அமுக்கம் (atmospheric pressure) 14. 7 psi (09)

1. 19.3 psi
2. 48.7 psi
3. 34.7 psi
4. 28.3psi
5. 29.4 psi

159. வேணியர் மானி ஒன்றினது பிரதான அளவிடையானது மில்லி மீற்றர்களில் அளவிடப்பட்டுள்ளது. அதன் இடுக்கிக்கு இடையே பொருள் ஒன்றும் இல்லாத போது வேணியரின் 50 ஆவது பிரிவானது அதன் பிரதான அளவிடையின் 49 ஆவது பிரிவுடன் பொருந்தி இருந்தது. வேணியர் மானியின் இழிவு எண்ணிக்கை யாது? (10)

1. 0.01mm
2. 0.1mm
3. 0.02mm
4. 0.2mm
5. 0.001 mm

160. ஓர் முகச்சவர அலகின் தடிப்பு 0.01 mm ஐச் சரியாக அளப்பதற்கு மிகவும் பொருத்தமான உபகரணம் (10)

1. வேணியர் இடுக்கி
2. உட்பக்க இடுக்கி
3. வெளிப்பக்க இடுக்கி
4. நுண்மானி
5. நகரும் நுணுக்குக் காட்டி

161. படத்தில் காட்டப்பட்டுள்ள கை உபகரணம் எவ் வகையைச் சார்ந்தது? (11)



1. அலன் சாவி (Allen key)
2. சீராக்கிப் புரியாணிச் சாவி (Adject table wrenches)
3. சேர்மானச் சாவி (Combination spanners)
4. முறுக்குத்திறன் முறுக்கலி (Toroue Winch)
5. திருகாணிச் செலுத்தி (Screw Drivers)

162. 0.01cm இழிவெண்ணிக்கையும் 0.7mm மறைப்பூச்சிய வலுவும் உடைய ஓர் வேணியர் கணிச்சியை பயன்படுத்தி அளந்த போது கருவி காட்டிய வாசிப்பு கீழே வரிப்படத்தில் காட்டப்பட்டுள்ளவை அப்பொருளின் நீளம் யாது? (09)



1. 3.62mm
2. 36.3mm
3. 34.9mm
4. 3.56mm
5. 3.5 mm

163. நுண்மானித் திருகுக்கணிச்சியைப் பயன்படுத்திப் பெற்றுக் கொண்ட வேலைப்பகுதி ஒன்றின் அளவீடு உருவில் காட்டப்பட்டுள்ளது. நுண்மானித் திருகுக்கணிச்சி பூச்சிய வழு அற்றதாகும். நுண்மானித் திருகுக்கணிச்சியின் அதி குறைந்த அளவீடு 0.01mm ஆகும். இங்கு காட்டப்பட்டுள்ள வாசிப்பு. (07)



1. 3.45mm
2. 3.40mm
3. 3.30mm
4. 3.95mm
5. 4.00mm



164. தரப்பட்ட அளவுகோலைப் பயன்படுத்தி அளவீடு எடுக்கும்போது பெறக் கூடிய மிகச் சிறிய அளவீடு (04)

1. 1 cm
2. 1m
3. 1mm
4. 0.1mm
5. 0.01mm

165. வேணியர் இடுக்கியொன்றின் இழிவுப் பெறுமானம் 0.1mm ஆக காணப்பட்டது. இதனால் அளவிட முடியாத திருத்தமற்ற அளவீட்டுப் பெறுமானம். (06)

1. 5.1mm 2. 5.2mm 3. 5.36mm
4. 5.4mm 5. 5.5mm

166. Peeler Gouge பயன்படுத்தி அளக்கக் கூடியது (04)

1. வேலைப் பொருளின் நீளம் 2. வேலைப் பொருளின் அகலம்
3. வேலைப் பொருளுக்கு இடையில் உள்ள இடைவெளி 4. வேலைப் பொருளின் தடிப்பு
5. மேற்குறிப்பிட்ட எல்லாம்

167. அருகிலுள்ள திருகாணி நுண்மானியின் பூச்சிய வழுவைத் தருவது?
(பரியிடைத்தூரம் 0.5mm வட்டப்பிரிவுகள் 50) (03)



1. 0.47 mm மறைப்பூச்சிய வழு
2. 0.47 mm நேர்ப்பூச்சிய வழு
3. 0.3 mm மறைப்பூச்சிய வழு
4. 0.01 mm மறைப்பூச்சிய வலு
5. 0.03 mm மறைப்பூச்சிய வழு

168. முறுக்குத்துளை ஊசி ஒன்றினை எண்ணெய்க்கல் அல்லது வட்டச் சாணைக்கல்லினைப் பயன்படுத்தி கூர்மையாக்கும்போது ஆக்க வேண்டிய கூர்மைக் கோணம் யாது? (03)

1. 87^0 2. 60^0 3. 118^0 4. 30^0 5. 90^0

169. ஓர் அளக்கும் வரைகோல் 0.5mm வரைக்கும் படிவகுக்கப்பட்டுள்ளது. நீளத்தை அளக்கும்போது அதன் படிவகுக்கைக்கேற்ப எதிர்பார்க்கத்தக்க உயர்ந்தபட்ச வழு (12)

1. ± 1.0mm 2. ± 0.75mm 3. ± 0.5mm
4. ± 0.25mm 5. ± 0.05mm

170. 0.5mm புரியிடைத் தூரத்தையும் 50 வட்டப்பிரிவுகளையும் கொண்ட திருகாணி நுண்மானி ஒன்றின் மறைப்பூச்சிய வழு 0.06mm ஆகும். இக் கருவியால் கோளம் ஒன்று அளக்கப்பட்ட போது பெற்ற வாசிப்பு மேலே காட்டப்பட்டுள்ளது. கோளத்தின் உண்மை ஆரையைத் தருக. (01)



1. 0.79mm
2. 0.76mm
3. 1.58mm
4. 0.82mm
5. 2.08mm

171. அளவீட்டு கருவியின் வகை அல்லாதது? (02)

1. நேர்கோட்டு அளவீட்டுக் கருவி (Linear) 2. கோண அளவீட்டுக்கருவி (Angular)
3. உணரி அளவீட்டுக் கருவி (sensors) 4. ஒளி அளவீட்டுக் கருவி (laser ray)
5. மேற்கூறிய எதுவுமன்று

172. தொழில்நுட்பப்பிரிவு மாணவன் ஒருவனால் நுண்மானித் திருகுக்கணிச்சியைப் பயன்படுத்திப் பெற்றுக்கொண்ட அளவீடு உருவில் காட்டப்பட்டுள்ளது. நுண்மானித் திருகுக் கணிச்சி பூச்சிய வழு அற்றதாகும். நுண்மானித் திருகுக்கணிச்சியின் அதிகுறைந்த அளவீடு 0.01mm ஆகும். இங்கு காட்டப்பட்டுள்ளவாசிப்பு (14)



1. 6.15mm 2. 6.01mm 3. 6.19mm
4. 6.51mm 5. 6.10mm

173. பின்வருவனவற்றுள் எவ்வடிவம் அரத்தின் குறுக்குவெட்டு வடிவத்திற்கு உதாரணமாக இருக்கும்? (02)



5. யாவும் சரி

174. சாதாரண அளக்கும் கருவி ஒன்றால் அளக்கக் கூடிய மிகச் சிறிய அளவீடு யாது? (02)

1. 10mm
2. 10/10mm
3. 100/10mm
4. 5mm
5. 1cm

175. வெட்டுதல், குறித்தல், துளையிடல், புரிவெட்டுதல் போன்ற செயற்பாடுகளுடன் தொடர்புபட்ட கருவித்தொகுதி யாது? (02)

1. உலோகவாள், மையவமுக்கி, துளைகருவி, புரிவெட்டி,
2. சட்டவாள், துளைகருவி, மையவமுக்கி, புரிவெட்டி
3. வாங்கு கத்தரி, வெட்டுளி, துளைக்கருவி, புரிவெட்டி
4. 1உம், 2உம்
5. 2 மட்டும்

176. வேணியரின் புறத்தாடையால் அளக்க முடியாதது(01)

1. மாபிள், உருண்டையின் விட்டம்
2. மாபிள் உருண்டையின் ஆரை
3. நீர்க்குமிழி ஒன்றின் விட்டம்
4. கண்ணாடி வில்லை ஒன்றின் விட்டம்
5. பனடோல் குளிகை ஒன்றின் நீளம்

177. கோலின் நேர் இயல்பை (Straitness) அளப்பதற்கு உகந்த கருவி (01)

1. நுண்மானி
2. வேணியர் இடுக்கி
3. முகப்புமானி
4. உணர்மானி
5. திருகாணி நுண்மானி (Micro meter)

178. பொறிகள், உபகரணங்களின் காப்புக் காரணி தொடர்பான பின்வரும் கூற்றுக்களில் சரியானது சரியானவை? (09)

A. காப்புக் காரணி $=$ $\dfrac{\text{தாங்கத்தக்க உச்ச சுமை}}{\text{தொழிற்படு சுமை}}$

B. காப்புக்காரணியின் இழிவுப் பெறுமானம் 1 ஆகும்.

C. காப்புக் காரணி குறைந்த பெறுமானத்தில் காணப்படும் போது ஆபத்து விளையும் சாத்தியம் உயர்வாக காணப்படும்

1. A மட்டும்
2. A, C மட்டும்
3. B, C மட்டும்
4. A, B மட்டும்
5. A, B, C எல்லாம்

உலோகங்களும் உற்பத்தி செயற்பாடும்

179. வளர்ந்தவர்களுக்கான துவிச்சக்கர வண்டியில் இருக்கை (Sheet) ஒன்றின் Plan View ஐத் தருவது? (01)



180. உலோகம் ஒன்றை நீர் வெட்ட எத்தனிக்கின்றீர் எனில், நீர் கவனத்தில் கொள்ள வேண்டிய முக்கிய விடயம் யாது / யாவை? (02)

a. உலோகத்தின் தடிப்பு
b. உலோகத்தின் தன்மை
c. உலோக வகை

1. a மட்டும் 2. a உம் c உம் 3. a உம் b உம்
4. a உம் b உம் c உம் 5. b மட்டும்

181. செயற்பாட்டு அறை ஒன்றில் நாளாந்தம் பாவனைக்கு தேவையான பொறிகளை வடிவமைக்கும் பொறுப்பு உமக்கு வழங்கப்பட்டுள்ளது. செயற்பாட்டு துறைக்கென பொறியை வடிவமைக்கும் போதான முதற்படிமுறையாக கொள்ளக்கூடியது (05)

1. பொறியின் பருமட்டான படம் வரைதல்
2. பொறியின் மாற்றீட்டு வடிவமைப்புக்களை அடையாளங்காணல்
3. பொறியின் தேவையை அடையாளங் காணல்
4. பொறியின் விற்பனை இலாபத்தைக் கணித்தல்
5. பொறி உற்பத்திற்கான மூலப்பொருளை இனங்காணல்

182. கூரை அமைப்பில் பயன்படுத்தப்படும் உருக்கு சட்டப்படல் கூரைச்சட்டத்தினை (Steel truss) இணைப்பதற்கு கோண இரும்பு (Angle Iron) பயன்படுத்தப்படுகின்றது. இவற்றை இணைக்க பயன்படுத்தப்படும் இணைப்பு முறைகள் (05)

a- நட்டாணி முறை (Balt nut) b- தறைதல் முறை (Riverrt)
c- உருக்கி ஒட்டுதல் முறை (welding) d- நட்டாணியும், ஒட்டுதலும்

1. a, b மட்டும் 2. b,c மட்டும் 3. a.c மட்டும்
4. b, d மட்டும் 5. a, b, c, d முறையாவும்

183. தரப்பட்ட வேலைப் பாகத்தின் மேற்பரப்பு Aயினை முடிப்புச் செய்யவும் துளையிடவும் பயன்படுத்தக்கூடிய பொறி / பொறிகளைத் தெரிவு செய்க. (07)

1. உருவமைத்தல் பொறியும் துளைத்தல் பொறியும்
2. கடைச்சல் பொறியும் துளைத்தல் பொறியும்
3. கடைச்சல் பொறி மட்டும்
4. உருவமைத்தல் பொறி மட்டும்
5. துளைத்தல் பொறி மட்டும்



184. 1.5mm தடிப்புடைய கல்வனைசு இரும்புத் (GI) தகட்டினைப் பயன்படுத்தி வாளிகளைத் தயாரிக்க வேண்டியுள்ளது. அதற்காகப் பின்வரும் ஒருங்கு சேர்த்தல் (Assembling) முறைகளைப் பயன்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

A. தறைதல் B. தனி மடிப்பு மூட்டு
C. இரட்டை மடிப்பு மூட்டு D. வாயுக் காய்ச்சியிணைத்தல்

இவற்றுள் GI வாளி தயாரிப்பதற்கு பொருத்தமான முறைகள் யாவை? (07)

1. A, B மட்டும் 2. B, C மட்டும் 3. C, D மட்டும்
4. B, D மட்டும் 5. A, C மட்டும்

185. ஒட்சி அசற்றலின் காய்ச்சியிணைத்தல் முறையில் பயன்படும் மூன்று விதமான சுவாலைகளைத் தருக? (09)

1. நொதுமற் சுவாலை, ஒட்சியேற்றச் சுவாலை, காபனேற்று சுவாலை
2. ஒட்சி அசற்றலின் சுவாலை, நொதுமற் சுவாலை, காபனேற்று சுவாலை
3. ஒட்சி அசற்றலின் சுவாலை, ஒட்சியேற்றச் சுவாலை, காபனேற்று சுவாலை
4. காபனேற்று சுவாலை, ஒட்சியேற்றச் சுவாலை, ஒட்சி அசற்றலின் சுவாலை
5. காபனேற்று சுவாலை, ஒட்சியேற்றச் சுவாலை, அசற்றலின் சுவாலை

186. இரு உலோகப் பகுதிகளை ஒன்றோடொன்று நிரந்தரமாகத் தொடுக்கத்தக்கது (09)

1. ஒட்டுவதன் மூலம் (Bonding)
2. மூட்டுவதன் மூலம் (Joining)
3. உருகிணைப்பதன் மூலம் (Welding)
4. புரியாணிகளை இடுவதன் மூலம் (nut and bolt)
5. தறைவதன் மூலம் (riveting)

187. இரு பிளாத்திக்குகளை இணைப்பதற்கு எவ்முறை மிகவும் உகந்தது? (10)

1. வில்லுரு இணைப்பு 2. ஊன்பசையொட்டி 3. பற்றாசிடல்
4. வாயுமுறை உருக்கிணைப்பு 5. ஆணியடித்தல்

188. சாதாரணமாக ஒரு பொருளை வளைக்கும்போது செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் (11)

A. அதன் வலிமை
B. அதன் நீளம்
C. ஆக்கப்பட்டுள்ள மூலப்பொருட்களின் இயல்பு
D. மண்ணின் தாங்குதிறன்

1. A, B மட்டும் சரி 2. B,C மட்டும் சரி 3. A,B,C மட்டும் சரி
4. B,C,D மட்டும் சரி 5. A, B,C, D எல்லாம் சரி

189. தறைதலானது இரு உலோகத் தகடுகளை மூட்டுவதற்கு அடிக்கடி பயன்படுத்தப்படும் கோப்புப் பொறிநுட்பம் ஆகும். பின்வரும் கூற்றுக்களில் உண்மையானவை? (09)

A. இரு மெல்லிய உலோக தகடுகளை மூட்டுவதற்குத் தறைதலைப் பயன்படுத்தலாம்
B. தறைதல் ஒரு நிரந்தரமான நிலைப்படுத்தலன்று
C. தறைதல் மூட்டின் அயலில் தாய் உலோகங்களின் திரவிய இயல்புகளை மாற்றுவதில்லை.
D. இரு தடித்த உலோகத் தகடுகளை மூட்டுவதற்குத் தறைதலைப் பயன்படுத்தலாம்.

1. ABC 2. ABD 3. ACD
4. BCD 5. ABCD



190. 0.15 mm மறைபூச்சிய வழுவுடைய வேணியர் கருவியால் பொருள் ஒன்றை அளந்த போது பெற்ற வாசிப்பு நிலை மேலே தரப்படுகின்றது. இவ்வாசிப்பின் பின்ன வழுவை சரியாக வகை குறிப்பது எது? (11)

1. $\frac{0.05}{13}$ 2. $\frac{1}{272}$ 3. $\frac{5}{136}$ 4. $\frac{0.05}{0.15}$ 5. $\frac{0.05}{13.45}$

191. ஒரு பதார்த்தத்தின் தற்றிறன்கள் பற்றிய பின்வரும் கூற்றுக்களை கருதுக.

A. நிறமும் அடர்த்தியும் பௌதீக இயல்பாகும்
B. மீள் தன்மையும் நெருங்கும் இயல்பும் பொறிமுறை இயல்பாகும்.
C. தன் வெப்பக் கொள்ளளவும் உருகல் மறைவெப்பமும் வெப்ப இயல்பாகும்
D. உருகுதன்மையும் வலிமையும் இரசாயன இயல்பாகும். (09)

இவற்றில் உண்மையானவை. (09)

1. A,B ஆகியன மாத்திரம் 2. A, C ஆகியன மாத்திரம் 3. A,B,C ஆகியன மாத்திரம்
4. B,C,D ஆகிய ன மாத்திரம் 5. A,B,C,D ஆகிய எல்லாம்

192. சிறந்த தீந்தை (Paint) ஒன்றின் சிறப்பியல்புகள் யாவை? (02)

1. நன்கு ஒட்டும் தன்மை
2. நீண்டகாலப் பாவனை
3. காலநிலைகளால் பாதிக்கப்படாமல் இருக்கும் தன்மை
4. 1 மட்டும் சரி
5. 1,2,3 யாவும் சரி

193. பின்வருவனவற்றில் வெப்ப நிறுத்திப் பிளாத்திக்கு (Thermo setting plastic) வகையைச் சேர்ந்த தொகுதி (03)

A. எக்ரிலிக் (Acrylic)
B. பொலியஸ்டர் ரெஸின் (Polyyester tesine)
C. பொலி எதலின் (Poly ethylene)
D. பேக்வைட் (Fenolic)

1. A,B 2. B,C 3. C, D 4. A, D 5. B,D

194. பின்வருவனவற்றுள் அலுமினியத்தின் இயல்புகளில் ஒன்று அல்லாதது (03)

1. பாரமற்றது
2. பற்றாசு பிடித்தல் இலகுவானது
3. சிறந்த வெப்ப மின் கடத்தி
4. ஒப்பமாக்கல் செய்யமுடியும்
5. துருப்பிடித்தலுக்கு எதிரான உயர் தடையைக் காட்டும்

195. இயற்கை அல்லுலோகம் அல்லாதது எது? (02)

1. மரம்
2. இறப்பர்
3. சுண்ணாம்பு
4. கண்ணாடி
5. அமில வகை

196. வெப்ப நிறுத்தி பிளாஸ்டிக்கு உதாரணமாக அமைவது? (02)

1. எக்ரிலிக்
2. நைலோன்
3. பொலிவயனைல் குளோரைட்
4. பொலிஎதின்
5. எபொக்ஸி

197. வார்ப்பிரும்பு (cast iron) இல் காணப்பட வேண்டிய மூலகங்கள் கீழே தரப்பட்டுள்ளன. அவற்றுள் தவறான மூலக கலப்பு விகிதம் எது? (05)

1. காபன் (c) - 2.25% - 4.3 %
2. கந்தகம் (S) - 10.1% - 22.2%
3. சிலிக்கன் (Si) - 0.1% - 0.2 %
4. பொசுபரசு (P) 0.05% - 0.85%
5. மக்னீசியம் (mg) - 0.25% - 0.5%

198. குளிரான நிலையிலும் சூடான நிலையிலும் வித்தியாசம் அடையாத பொருள் ஒன்றின் பண்பானது (10)

1. பிசுபிசுப்பி 2. மின்தடை 3. நிறை 4. அடர்த்தி 5. மின் கடத்தும் தன்மை

199. ஒரு மொட்டையான மண்வெட்டி அலகைக் கூராக்குவதற்காகக் கொல்லனிடம் எடுத்துச் செல்லும்போது

A. கொல்லன் மண்வெட்டியின் வலிமையைக் குறைப்பதற்குத் தொடக்கத்தில் வெப்பமாக்குகிறான்.
B. உயர் வெப்பநிலைகளில் வாட்டற்றகவு அதிகரிப்பதனால் கொல்லன் மண்வெட்டியை உருத்திரிவு அடையச் செய்யத்தக்கதாக உள்ளது.
C. மண்வெட்டியைக் கூராக்கிய பின்னர் அது மறுபடியும் வெப்பமாக்கப்பட்டு அதன் வன்மையை அதிகரிக்கச் செய்வதற்கு நீரில் தணிக்கப்படுகின்றது.
D. கூர்மையும் வன்மையும் அடையப்பட்டதும் குறுகிய நேரத்தில் கூர்மை கெடுகின்றது.

மேற்கூறியவற்றில் சரியான கூற்று / கூற்றுக்கள் (13)

1. A மாத்திரம்
2. B மாத்திரம்
3. A, D ஆகியன மாத்திரம்
4. B, C ஆகியன மாத்திரம்
5. B, C, D ஆகியன மாத்திரம்

200. கைத்தொழிற் புரட்சி நடைபெற்ற காலத்தின்போது ஏற்பட்ட தொழில்நுட்பவியல் அபிவிருத்தியின் விளைவாக அடையாதது (13)
1. கையினால் செய்த கைத்தொழில்களுக்குப் பொறிகளை அறிமுகஞ் செய்தல்
2. நிலப் போக்குவரத்தைப் பொறிமயமாக்கல்
3. பொறிகளுக்காக எரிபொருளாக நிலக்கரியைப் பயன்படுத்தத் தொடங்குதல்
4. விமானப் போக்குவரத்தின் ஆரம்பம்
5. நீரிலும் கொதி நீராவியிலும் சக்தியைப் பயன்படுத்தல்

201. திரவியங்களில் விசேட இயல்புகளை ஏற்படுத்தப் பல்வேறு பிரயோகங்கள் பயன்படுத்தப்படுகின்றன. பின்வரும் எவ்வியல்பு தரப்பட்டுள்ள பிரயோகத்துடன் பொருந்துவதில்லை? (14)
1. அரிப்புக்கான தாக்குப்பிடிப்பு - உணவு அடைக்கப்படும் பாத்திரங்களில் வெள்ளீயத்தைப் பூசுதல்
2. நெருக்கு சுமைகளைத் தாங்குதல் - கொங்கிறீற்று
3. வன்மை - வெட்டல் கருவிகள்
4. நொறுங்குமியல்பு - வாகனத்தின் சுருள் வில்
5. மீள்தன்மை விற்றராசு

202. ஒரு 1mm தடித்த மெல்லுருக்குத் தகட்டிலிருந்து குறைந்தபட்ச உருக்கிணைப்புகளுடன் ஒரு சதுரமுகியை உற்பத்தி செய்ய வேண்டியுள்ளது. இதில் முதலிற் செய்யவேண்டியது (13)
1. தகட்டிலிருந்து தேவைக்கேற்பச் சதுர வெட்டுள்ள ஆறு துண்டுகளை வெட்டல்
2. துண்டுகளை வெட்டப்போதிய தகட்டு உலோகத்தின் ஒரு துண்டத்தை வெட்டல்
3. ஒரு கிடைப்படத்தை வரைதல்
4. உலோகத்தகடு போதியதாவெனச் செவ்வை பார்த்தல்
5. எவ்வளவு தகட்டு உலோகம் விரயமாகும் என்பதைச் செவ்வை பார்த்தல்

203. மின் வில் உருக்கிணைத்தலில் வில்லின் வலிமை கட்டுப்படுத்தப்படுவது
1. உருகிணைக்கும் கோலின் வகையை மாற்றுவதால்
2. உருகிணைப்புக்கும் கோலுக்குமிடையே உள்ள இடைவெளியை மாற்றுவதால்
3. உருகிணைக்கும் உபகரணத்திற்கு வழங்கும் ஓட்டத்தை மாற்றுவதால்
4. உருகிணைக்கும் உபகரணத்திற்கு வழங்கும் வோல்ற்றளவை மாற்றுவதால்
5. உருகிணைப்பில் மசகெண்ணெயைப் பூசுவதால்

204. ஓர் ஒட்சியசற்றலீன் சுவாலையைப் பயன்படுத்தி ஒரு மெல்லிய உலோத் தகட்டை வெட்ட வேண்டியுள்ளது. இதற்குப் பயன்படுத்த வேண்டிய சுவாலை (12)
1. அசற்றலீன் மிக்க ஒரு சுவாலை
2. ஒட்சிசன் மிக்க ஒரு சுவாலை
3. ஒரு நொதுமல் (நடுநிலைச்) சுவாலை
4. ஒரு காபனேற்றும் சுவாலை
5. ஒட்சிசனுடனும் அசற்றலினுடனும் ஒரு சடத்துவ வாயுவைக் கொண்ட ஒரு சுவாலை

205. 1mm தடித்த மெல்லுருக்குத் தகட்டிலிருந்து குறைந்தபட்ச உருக்கிணைப்புகளுடன் இரு சதுர முகியை உற்பத்தி செய்ய வேண்டியுள்ளது. அதில் முதலில் செய்ய வேண்டியது (14)
1. தகட்டிலிருந்து தேவைக்கேற்ப சதுர வெட்டுள்ள 6 துண்டுகளை வெட்டல்
2. துண்டுகளை வெட்டப் போதிய தகட்டு உலோகத்தின் ஒரு துண்டத்தை வெட்டல்
3. ஒரு கிடைப்படத்தை வரைதல்
4. உலோகத்தகடு போதியதாவென செவ்வை பார்த்தல்
5. எவ்வளவு தகட்டு உலோகம் விரயமாகும் என்பதைச் செவ்வை பார்த்தல்

206. அலுமினியத் தகடுகளைப் பயன்படுத்திச் செய்யப்பட வேண்டிய ஒரு சிற்றலுமாரியைக் கோப்பதற்கு மிகவும் உகந்த முறை (13)
1. காய்ச்சி உருகிணைத்தல் 2. மூட்டுதல் 3. திருகுதல்
4. தறைதல் 5. உருகிணைத்தல்

207. பின்வருவன உலோக வேலைத் தொழினுட்பவியல் தொடர்பான சில கூற்றுக்களாகும்.
A - ஒரு கடைசற்பொறியைப் பயன்படுத்தி உருளைப் பகுதிகளையும் துளைகளையும் மாத்திரம் உற்பத்தி செய்யலாம்.
B - உருக்கை ஆக்குவதில் நெகிழ் உருச்சிதைவு நடைபெறுகின்றது
C - உயர் வெப்பநிலைகளில் மாத்திரம் உருக்கை ஆக்கலாம்
மேற்குறித்தவற்றில் சரியான கூற்று / கூற்றுகள் (12)
1. A மாத்திரம் 2. B மாத்திரம் 3. C மாத்திரம்
4. AB ஆகியன மாத்திரம் 5. AC ஆகியன மாத்திரம்

பாதுகாப்பும் பராமரிப்பும் முதலுதவியும்

208. தொழில் தளமொன்றில் செயற்பாட்டில் ஈடுபட்டிருக்கும் தொழில் வினைஞரை அறிவுறுத்துவதற்கு ஏற்ற வகையிலான கட்புல, செவிப்புல தொடர்பாடல் முறையே பாதுகாப்பு சமிக்ஞைகள் ஆகும்.

A. செம்மை B. தெளிவு C. இனங்காண இலகுவான தன்மை
D. கவனத்தை ஈர்க்கும் தன்மை E. தொழில்வினைஞரை குழப்பாமை

இதில் பாதுகாப்பு சமிக்ஞை தொடர்பான இயல்பு அல்லாதது (11)
1. A மட்டும் 2. B மட்டும் 3. C யும் E யும்
4. D யும் E யும் 5. E மட்டும்

209. முதலுதவியாளர் ஒருவரிடம் இருக்க வேண்டிய பண்பு அல்லாதது (01)
1. கருணை 2. பொறுமை 3. சமயயோசிதபுத்தி
4. சுறுசுறுப்பு 5. வெறுப்புணர்வு

210. இரண்டாம் உலகப்போர் நடைபெற்ற காலத்தின் போது ஏற்பட்ட தொழில்நுட்பவியல் அபிவிருத்தியின் விளைவாக அமையாதது. (09)
1. அதிக அளவு எரிபொருளை கொண்டு செல்வதற்கு ஜெரிக் கலம் உற்பத்தி செய்யப்பட்டது.
2. ஜெற் எஞ்சின் உற்பத்தி செய்யப்பட்டது
3. றேடார்த் தொழில்நுட்பவியலின் உருவாக்கம்
4. அணுசக்தி தொழினுட்பவியலின் அபிவிருத்தி
5. நீரிலும் கொதி நீராவியிலும் சக்தியைப் பயன்படுத்தல்

211. உலர் இராசாயனப் பதார்த்தத் தீயணைப்பு உபகரணம், நுரை தீயணைப்பு உபகரணங்களை காட்டப்பயன்படுத்தப்படும் நியம நிறம் (09)
1. கறுப்பு சிவப்பு 2. கறுப்பு இளமஞ்சல் 3. நீலம், இளமஞ்சல்
4. சிவப்பு, இளமஞ்சல் 5. பச்சை, சிவப்பு

212. மின்கசிவினால் விபத்துக்குள்ளான செய்யத்தகாதது (09)
1. மிக விரைவாக மின்னிணைப்பில் இருந்து விடுவித்தல்
2. உடலில் தீ பரவி இருக்குமாயின் நீர் ஊற்றி அணைத்தல்
3. காயம் ஏற்பட்டுள்ளதா என பரீட்சித்து முதலுதவி செய்தல்
4. விபத்துக்குள்ளானவரை உடனடியாக தொடாது இருத்தல்
5. உடனடியாக வைத்தியரை நாடுதல்

213. தொழினுட்பவியலின் பயன்பாடுகளையும் பண்பாட்டு மாற்றங்களையும் அடிப்படையாகக் கொண்டு தொழினுட்ப வளர்ச்சி வரலாற்றுக் காலங்களின் பிரிப்பில் உள்ளடங்காத காலம்? (07)
1. தற்காலம் 2. இடையர் காலம் 3. விவசாய காலம்
4. தொழிநுட்பக் காலம் 5. மரபணு தொழிநுட்பக்காலம்

214. பின்வரும் எது SI தொகுதியின் ஓர் அடிப்படை அலகை வகைகுறிப்பதில்லை? (09)
1. kg 2. N 3. m 4. s 5. k

215. கானீரொட்சைட்டுத் தீயணைகருவிகளைக் காட்டப் பயன்படுத்தப்படும் நியம நிறம் (13)
1. சிவப்பு 2. மஞ்சள் 3. கறுப்பு 4. நீலம் 5. பச்சை

216. பாய்மப் பொறிகளை வடிவமைப்பதில் கருத்திற் கொள்ளப்படவேண்டிய காப்புக் காரணியாக அமையாதது யாது? (12)
1. கொள்ளளவு
2. காப்புக் காரணி (Safty Factor)
3. காப்பு வால்வுகள் (Safety Vales)
4. மிகைச் சுமை ஆளிகள் (Overload Switches)
5. அமுக்க நிவாரண வால்வுகள் (Pressure Relief Valves)

217. ஒரு கட்டடத்தின் பிரதான மின் பரப்பற் பலகையில் ஒரு தீ ஏற்படத் தொடங்கியுள்ளது. ஒரு கிட்டிய இடத்தில் நிறுவப்பட்டுள்ள சிவப்பு, கறுப்பு, நீலம் ஆகிய நிறங்களில் உள்ள தீயணை கருவிகள் உள்ளன. தீயை அணைப்பதற்குப் பயன்படுத்தபட வேண்டிய தீயணை கருவிகளின் நிறம் / நிறங்கள் (12)
1. சிவப்பும் கறுப்பும் 2. சிவப்பும் நீலமும் 3. கறுப்பு மாத்திரம்
4. சிவப்பு மாத்திரம் 5. நீலமும் கறுப்பும்

இலத்திரனியலும் மின்னியலும்

படலைகளும், நிலைமாற்றிகளும்

01. பூலக் கோவை $Y = \overline{A}B + AB\,A\overline{B}$ இற்குச் சமவலுவானது. (12)



1) a மாத்திரம்
2) b மாத்திரம்
3) a, b ஆகியன மாத்திரம்
4) b, c ஆகியன மாத்திரம்
5) c மாத்திரம்

02. தரப்பட்ட சேர்மானத் தருக்கச் சுற்றின் பயப்புக்குப் பின்வரும் உண்மை அட்டவணைகளில் எது சரியானது?



1)

A	B	Z
0	0	1
0	1	0
1	0	0
1	1	1

2)

A	B	Z
0	0	1
0	1	0
1	0	1
1	1	1

3)

A	B	Z
0	0	1
0	1	1
1	0	1
1	1	1

4)

A	B	Z
0	0	0
0	1	1
1	0	1
1	1	1

5)

A	B	Z
0	0	1
0	1	1
1	0	0
1	1	0

03. காட்டப்பட்டுள்ள கட்ட வரிப்படத்தில் கட்டுப்பாட்டு முடிவிடத்தில் பெய்ப்புத் தருக்க மட்டம் '0' ஆக இருக்கும் போது பயப்பு பெயப்புப் போன்று அதே தருக்க மட்டத்தையும் கட்டுப்பாட்டு முடிவிடத்தில் தருக்க மட்டம் '1' ஆக இருக்கும் போது பயப்பு பெய்ப்புப் போன்று நேர்மாற்றிய தருக்க மட்டத்தையும் கொண்டிருத்தல் வேண்டும். இதனை அடைவதற்குத் தேவைப்படும் A யின் வாயிற் சார்பு யாது?

1) XOR
2) NOR
3) AND
4) OR
5) NAND



04. $\overline{\bar{A} + \bar{B} = F}$ எனில் இதற்குரிய கதவம்

1) 

2) 

3) 

4) 

5) 

05. நிலைமாற்றி ஒன்றின் முதன்மைச் சுற்றிக்கு படத்தில் காட்டியவாறு சுற்று A,B யில் முறையே ஆடல்ஓட்ட, நேரோட்ட 50v மின்இயக்கசக்தி கொண்ட மின்முதல்கள் வழங்கப்படுகிறது. சுற்று A,B யின் துணைச் சுற்றில் உள்ள மின் அழுத்த வேறுபாடு V2 இனைச் சரியாகத் தருவது?

1) 500V, 500V
2) 500V, 0V
3) 0V, 500V
4) 1000V, 1000V
5) 1000V, 0V



06. அருகிலுள்ள Relay சுற்றில் P, Q, R குறிப்பது? (14)

1) Common, N/C, N/O
2) Common, N/O, N/C
3) N/O, N/O Common
4) N/C, N/O Common
5) N/C, Common N/O



07.





உருவில் காட்டப்பட்டுள்ள சுற்றில் டெல்டா தொடுத்த 3 - கலைச் சுமையின் கலைவோல்ற்றளவும் கலை ஓட்டமும் முறையே (13)

1) 230.9 V, 69.3 A
2) 230.9 V, 40 A
3) 400 V, 120 A
4) 400 V, 69.3 A
5) 400 V, 40 A



08. ஒரு முக்கலைத் தூண்டல் மோட்டரைத் தொடக்குவதற்கு ஓர் உடு - டெல்ராத் (Star - delta) தொடக்கி பயன்படுத்தப்படுகின்றது. இம் மோட்டார் 400 V, 50 Hz ஆன ஒரு முக்கலை வழங்கலுடன் தொடுக்கப்படும் எனின் உடு, டெல்ரா ஆகத் தொடுக்கப்படும். போது அதன் சுற்றல்களில் உள்ள வோல்ற்றளவுகளின் பெறுமானங்கள் முறையே. (12)

1) $400V, \frac{400}{\sqrt{3}}V$ ஆகும்
2) $\frac{400}{\sqrt{3}}V, 400V$ ஆகும்
3) $400\sqrt{3}\,V, 400V$ ஆகும்
4) $400V,\ 400V$ ஆகும்
5) $400V,\ 400\sqrt{3}\ V$ ஆகும்

09. ஒரு DC தொடர்ச் சுற்றிய மோட்டாரின் ஆமேச்சர் ஓட்டம் (I_a) இற்கு சுழற்சிக் கதி (N) இன் மாறல் தொடர்பான சரியான வரைபு வகைக்குறிப்பதைக் காட்டுவது. (13)



10. ஓர் அசையும் சுருற் பல்மானியின் முழு அளவிடைத் திறம்பல் 0-500 V dc இற்கு அமைக்கப்படும் போது இரு முடிவிடங்களுக்கும் ஓர் ஆடல் 240V, 50 Hz சைன் வளையி வோல்ற்றளவு வழங்கப்படுகையில் உள்ள வாசிப்பு (13)

1) 240V இலும் குறைவாகும்
2) 240V இலும் கூடியதாகும்
3) செப்பமாக 240V ஆகும்
4) பூச்சியம் ஆகும்
5) 240V ஐச் சுற்றி 50Hz இல் அலைகின்றது.

11. Single phase transformer *(தனி அவத்தை மின்மாற்றி) ல் தன்னியக்க மின்மாற்றியை (*Auto transformer) *வகை குறிப்பது? (03)*

1)  *2)*  *3)*  *4)*  *5)* 

12. *தூண்டிகள் பற்றிய பின்வரும் கூற்றுக்களைக் கருதுக.*

A - *தூண்டியின் தூண்டற்றிறன் ஹென்றி* (H) *இல் அளக்கப்படும்.*

B - *தூண்டியினூடாக நேரோட்டத்தைப் பிரயோகிக்கும் போது தூண்டிய வோல்ற்றளவு உண்டாகிறது.*

C - *தூண்டியினூடாக ஆடலோட்ட வோல்ற்றளவை வழங்கும்போது தூண்டல் தாக்குதிறனானது வழங்கல் அதிர்வெண்ணுக்கு விகிதசமனாகும்.*

இக்கூற்றுக்களில் சரியானது / சரியானவை (06)

1) A *மாத்திரம்* *2)* B *மாத்திரம்* *3)* A,C *ஆகியன மாத்திரம்*

4) A,B *ஆகியன மாத்திரம்* *5)* A,B,C *ஆகிய எல்லாம்*

13. *தூண்டி ஒன்றின் தூண்டற்றிறன் பற்றிய கூற்றுக்களில் பிழையானது. (07)*

1) சுருள்களின் எண்ணிக்கையுடன் தூண்டல் திறன் அதிகரிக்கும்

2) தொடராக இணைக்கப்படின் தூண்டியின் சமவலுத் தூண்டல் திறன் அதிகரிக்கும்

3) தூண்டல் திறன் ஆனது H *என்னும் அலகினால் அளவீடு செய்யப்படுகின்றது.*

4) தூண்டி சமாந்தரமாக இணைக்கப்படும் போது சமவலுத் தூண்டல்த்திறன் அதிகரிக்கும்

5) சுருளின் நீளம், குறுக்குவெட்டுப் பரப்பு போன்றவற்றில் தூண்டற்றிறன் தங்கியிருக்கும்.

14. 

அருகில் காட்டப்பட்டுள்ள சுற்றின் AB *க்கு இடையிலான விளையுள் தூண்டற்றிறன் யாது? (08)*

1) 250H *2) 500*H *3) 400*H *4) 100*H *5) 50*H

15) 

அருகில் காட்டப்பட்டுள்ள மின்சுற்றின் உறுதியான மினனோட்ட நிலையில் மின்கலத்தினூடான மின்னோட்டத்தின் பருமன் யாது? (08)

1) 0.1A *2)* 1A *3)* 0.3A *4)* 3A *5)* 30A

16) 

அருகிலுள்ள தன்னியக்க மாற்றியில் V_0 *ன் பெறுமானம்? (05)*

1) 48V *2)* 96V *3)* 12V *4)* 144V *5)* 24

17) *மத்திய தொடுகை நிலைமாற்றி ஒன்றின் பிரதான சுருளிற்கு* 100V *நேர் ஓட்ட மின் அழுத்தம் வழங்கப்படுகின்றது. பிரதான சுருள் 100 சுற்றுக்களையும் துணைச்சுருள் 500 சுற்றுக்களையும் கொண்டது எனின்* AB *இற்கிடையில் காணப்படும் அழுத்த வேறுபாடு யாது? (07)*



1) 500V *2)* 250V *3)* 25V *4)* 50V *5)* 0V

18. *உரு ஆனது நேரடி மின்சார வலு வழங்கியின் மூன்று கட்டங்களை காட்டுகின்றது. 1 இலிருந்து 3 வரையான பிரதான கட்டங்களின் பொருத்தமான அலையுருக்களைச் சரியாக ஒழுங்கு முறையில் குறிப்பிடும் விடை எது? (10)*



19. ஒரு சந்திப்புல விளைவுத் திரான்சிற்றர் (JFET) இன் தொழிற்பாட்டிற்கு *(12)*

1) படலைக்கும் (gate) முதலிற்கும் (Source) இடையே உள்ள Pn சந்தி புறமாற்றுக் கோடலுறுதல் வேண்டும்

2) படலைக்கும் முதலிற்கும் இடையே உள்ள Pn சந்தி முன்முகக் கோடலுறுதல் வேண்டும்

3) வடிகால் (drain) நிலத்துடன் தொடுக்கப்படுதல் வேண்டும்

4) படலை வழங்கல் வோல்ற்றளவுடன் தொடுக்கப்படுதல் வேண்டும்

5) படலைக்கும் முதலிற்கும் இடையே உள்ள Pn சந்தி முன்முகக் கோடலுற்றும் வடிகால் புவியுடன் தொடுக்கப்பட்டும் இருத்தல் வேண்டும்.

20. ஒரு செயற்பாட்டு விரியாலாக்கியின் (Operational amplifier) அத்தியாவசியச் சிறப்பியல்பாக அமையாதது *(12)*

1) உயர் திறந்த தட வோல்ற்றளவு நயம் *2)* தாழ் வலு

3) உயர் பெய்ப்புத் தடங்கல் *4)* தாழ் பயப்புத் தடங்கல்

5) உயர் மீடிறன் விரியலாக்கல் (frequency gain) பட்டையகலம்

21. N முறுக்குகளைக் கொண்ட ஒரு வரிச்சுருள் $\frac{d\phi}{dt}$ இற்குச் சமனான பாய மாற்ற வீதம் உள்ள ஒரு காந்தப் புலத்திற்கு உட்படும் போது மின்காந்தத் தூண்டற் கோட்பாடுகளுக்கேற்பத் தூண்டிய மின்னியக்க விசை $E_o = -N \frac{d\phi}{dt}$ ஆகும். 100 முறுக்குகளைக் கொண்ட ஒரு வரிச்சுருள் 0.1 செக்கனில் 0.033 wb இலிருந்து 0.004 wb இற்கு மாறும் காந்தப் பாயத்தைக் கொண்ட ஒரு காந்தப் புலத்திற்கு உட்படும் போது தூண்டிய மின்னியக்க விசையின் பருமன். *(12)*

1) 0.1V *2)* 0.5V *3)* 1V *4)* 2V *5)* 3V

22. ஓர் அலையத்திற்கும் (Oscillator) விரியலாக்கிற்கும் (amplifier) இடையே உள்ள வேறுபாடு

1) அலையம் ஓர் உயர் வோல்ற்றளவு நயத்தை உடையது.

2) அலையத்திற்கு ஒரு பெய்ப்புச் சைகை தேவைப்படுவதில்லை

3) அலையத்திற்கு ஒரு நேரோட்ட வழங்கல் தேவைப்படுவதில்லை

4) ஓர் அலையத்தின் பயப்பு வோல்ற்றளவு எப்போதும் மாறிலியாகும்

5) அலையத்தின் வோல்ற்றளவு நயம் உயர்ந்தும் பயப்பு வோல்ற்றளவு எப்போதும் மாறிலியாகவும் இருக்கும்.

23. உருவில் ஒரு செயற்பாட்டு விரியலாக்கி (operational amplifier) உள்ள ஒரு சுற்று காணப்படுகின்றது. இச்சுற்றுப் பற்றிப் பின்வரும் கூற்றுக்களில் எது சரியானது? *(13)*

1) அது நேர்மாற்றும் விரியலாக்கியாக இருக்கும் அதே வேளை அதன் பயப்பு 100 mV ஆகும்

2) அது ஒரு நேர்மாற்றும் விரியலாக்கியாக இருக்கும் அதே வேளை அதன் பயப்பு

